உ.

சிவமயம்.

ரைவீரசுவாமிகதை

இஃது

சிதம்பரம்.

ருநாதசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

நுங்கம்பாக்கம்

ணகிரிமுதலியார்

அவர்களது

அம்பாளச்சேந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

மதுரைவீரசாமிதுதி-கவி.

உலகமிசைமன்னுயிர்கடன்னுயிரெனக்
கவிகைகிழமேவின்றே, ஒன்னலாதமைக்
ந்து செகந்சோலேறி புயாகாசிகராஜே
கிழக்கிடமக்கல யுபக்கத்தயன்றி பொ
ல்லை, உரகத்லைதாவு பெற்றபின்பு
றைபாதிகண்மனேயினில், நிலவிலனக்கோ
வீரனென்றபெயர் நிலவாகபோடைச்
பொய்மனை சீமைபுந்தவிதின்ற நேரிழை
ஆம், நிறைபுகழ்பெறடிவிஜயரங்கனென்னு ம
ளவாபல்காவல்செய்தும், நிகரில்பலவளெ
யிற்கன்னர்தமை கெஞ்சக்கலக்கமோதி, ல
னல்ல குணபூஷணங்கொடிரு மலேநாயக்க
மக்கைவெள்ளமகமையைக் கண்டன்புபூண்
விடச்சிறைபெடுத்தய, மதிகலழுமடக
புரமகளிலவளர்சொக்கநாதருகிலா மனு
ருனினை படைந்தேயுமயர் வாழ்த்திமலர்ப
இலகுமவ்வாலயத்தன்வாந்குங்கைகெழுமி
மேவியே, இப்புவிகீர்த்தியார்த்த மீரு
தா னேலல்குன்யத்தடனே, இருமக்காம
குட்டமன்னைடமிடி சோமந்தாரகாசம், இ
நிக்கிக்கதயவேமே யென்முன்னக் கதிச
கரணமே.

உ

கடவுள் துணை.

மதுரைவீரசுவாமிகதை

காப்பு.

அரியுமவீரமுஞ்சொல்லுங்கீர்த்தியும
அதிகவித்தையுமாண்மையுந்தானுமம
மதுரைவீரனநன்வணகதைவாழ்த்திடக்
கதிர்கொள்சித்திவிநாயகன்காப்பரோ.

பாயிரம்

வெண்செந்துறை.

விநாயகர்தன் செயயப்பதம்போற்றி
பனிக்கு முருகர்பாதமபோற்றி
க்கர் திருவடியைத் தொழுதுமிகப்போற்றி
திருமாலின் றாட்டாமரைபோற்றி
யைபறக்கண்ணையன்ட அம்பொற்பதம்போற்றி
கைலக்ஷுமியின் மலர்ப்பதங்கள்தான்போற்றி
ல்லைபதுக்காயிதன [illegible]ணைப்பதம்போற்றி
ளிதெய்வானை மலரடிகள்தான்போற்றி
ளிதிருவடியை வாழ்த்திமிகப்போற்றி
ணிக்கவாசகர்தம் [illegible]ப்போற்றி

செப்பரியசம்பந்தர் செம்பொற்பதம்போற்றி
அய்யர்திருவடியை யன்புடனே தான்போற்றி
சுந்தரமூர்த்தியது தங்கப்பதம்போற்றி
அந்தமிகுந்தசிவ னடியார்பதம்போற்றி
பாண்டியவளநாட்டில் பரிதியைப்போல்விளங்குந்
ஆண்டகையாமெங்க ளடன்வீரன்கதைசொல்வேன்

நாட்டுச்சிறப்பு.

மாதமும்மாரி வழங்கும்வளநாடு
காதமணம்வீசுங் காப்பகஞ்சேர்நன்னாடு
கருமபினைகளுக்குள் முத்தைக்காட்டுமகாநாடு
விரும்பியறமவளர்க்கு மேலானநன்னாடு
மும்போகமும்விளையு முதிர்ச்சியுள்ளநன்னாடு
எப்புறமுங்கங்கை விளங்குந்திருநாடு
நவதானியமவிளையும நல்லவளநாடு
தவமறையோர்மாமுனிவர் தங்கும்வளநாடு
தாமரைப்பூபொய்கைகளுந் தண்மலர்சேர்வாவிகளும்
ஆமைபுலாவு மழகானகேணிகளும்
பொன்னுமணிகொழிக்கும் புண்ணியவாறுகளும்
மன்னுந்தரளம்வழங்கிய வோடைகளும
சங்குதவழ்ந்துலவுந் தாழ்வில்லாபுஞ்சைகளும்
எங்குமணிவிளையு மெழிலானபுஞ்சைகளும
பாக்குமாச்சோலைகளும பன்மலர்ப்பூச்சோலைகளும்
சண்பகப்பூந்தவனம தவனமிகுந்தவனம்

விண்ணுலவுதோப்புகளும் விருகனித்தோப்புகளும்
மல்லிகைப்பூபந்திகளும் மருக்கொழுந்தின்பந்திகளும்
முல்லைமலர்பந்திகளும் முக்கனிமாப்பந்திகளும்
வாளைத்தளாவிநிற்க வைத்திடுநெற்போருகளும்
தாளங்கொடுக்கவைத்த தாழ்வில்களஞ்சியமும்
காமதேனுக்குநிகர் கணக்கில்லாபால்பசுவும்
சேமமிகுமாடுகளுந் திரளான ஆடுகளும்
பசித்தோரிளைப்பாரப் பாங்கானசத்திரமும்
பொசித்தோர்க்குச்சம்பாகம் பொருந்துசிவசத்திரமும்
ஆடையில்லார்க்காடை யளித்துவருஞ்சத்திரமும்
வாடைபனிநீர்புனுகு வழங்கிவருஞ்சத்திரமும்
வேதியர்க்குவேதம விளங்குமரச்சாலைகளும்
சாதிக்குசாதி தங்குமடச்சாலைகளும்
குயிலோசைமிஞ்சுங் குறைவில்லாமாந்தோப்பும்
மயிலாடிநிற்க வாய்த்தபலாத்தோப்பும்
அன்னங்குலாவு மாவிந்தப்பூந்தடமும்
வன்னக்களிகள்கொஞ்சும் வளமானநல்லரசும்
இன்னவளமிகுந்த வெழிற்காசிநன்னாடும்
தன்னையுரைக்கச்சேடன் றன்னாலுமாகாதே

மலைவளம்

வாரணவாசியைச்சூழ் மலைவளத்தைசொல்லுகிறேன்
ஆரணமாமுனிவ ரணியணியாய்த்தவமிருப்பார்
காட்டுபசுவுங் கடும்புலியுங்கலந்திருக்கும்
காட்டுபசுவோடுகூடபாய்ப்புலிகுலாவும்

பருந்தும்பைங்கிளியுமொரு பஞ்சரத்திலேவாழும்
பொருந்தராவுள்வாயிலெலி போய்புகுந்துபள்ளிகொள்
ளும்-பச்சோந்தியுமயிலும பட்சமுடன்வாழ்ந்திருக்கும்
செச்சையுங்கோணையுஞ் செருக்குடனேகூடிநிற்கும்
சிங்கமும்யானையுஞ் சேர்ந்துவிளையாடிநிற்கும
இந்தவளமிகுந்த வெழிர்காசிமாமலையைக்
கந்தனதுவாயாலுங் கட்டுரைத்தன்மிக்கரிதே

நகரச்சிரப்பு.

காசினியோர்தான்புகழுங் காசியெனுமாநகரந்
தேசமெங்குந்திலங்குந் தெய்வீகமாநகரம்
அம்பொன்னால்மாடகூட மமைந்திருக்குநன்னகரம்
கோபுரமெங்குங் குலவுந்திருநகரம
மாபுரமன்னர்மன்னர் மன்னுந்திருநகரம்
யானைகட்டிவாழுமுடியரசர்வாழ்வீதிகளும
சேனைத்தலைவர்பலர் சேர்ந்துவாழ்வீதிகளும்
அம்பொற்பணிகள்செய்யு மணிதட்டார்வீதிகளும
வேந்தர்க்குங்கோல்கொடுக்கும் வேளாளர்வீதிகளும்
சாந்துசவ்வாதுபன்னீர் தான்விற்போர்வீதிகளும
வேதமுறைதவறு வேதியர்கள்வீதிகளும்
சாதகந்தான்குறிக்குஞ் சாஸ்திரிமார்வீதிகளும்
கோலமணியளக்குங் குச்சிலியர்வீதிகளும்
வேலைப்பழிக்குமவிழி வேசியர்வாழ்வீதிகளும்
கோடிகுதிரையணி குமிந்திருக்குஞ்சாலைகளும்

ஆடிவருங்குதிரை யணியிருக்குஞ்சாலைகளும்
கடையுங்கடைத்தெருவும கனமானமாடங்களும்
கொடைதரும்செயபொற்குன்றுகொட்டிவைத்தகூடங்
களும்-வீதிக்குவீதி விளங்குஞ்சிவாலயமும்
நீதிவழுவாத நெறிமன்னராலயமும்
மன்னர்க்குநன்மதிசொல மந்திரிமார்மாளிகையும்
கன்னன்கொடையளிக்கும கனவான்களமாளிகையும்
எழுநிலைமாடங்களு மெழிலான கூடங்களும
தாழமகழிகளுந தங்கத்தாற்கோட்டைகளும்
போர்வீரரெப்புரமும் புடைசூழுங்காவல்களும்
தேர்வீரர்வாள்வீரர் திக்கெட்டுங்காவல்களும
வாளுரையில்வையாத வலுவீரர்காவல்களுங
தோள்கொட்டிதட்டிநிற்குந் துடிசூரர்காவல்களும்
கற்பிலவழுவாத கன்னியர்கள்கூட்டங்களும
அன்பிற்குறையாத அடியார்கள்கூட்டங்களும்
சன்மார்க்கமில்லாத சற்சனர்கள்கூட்டங்களும
துன்மார்க்கமில்லாத துரைமக்கள்கூட்டங்களும்
பந்துமுலைமாதர்பலர் பந்தடிக்குமேடைகளும
இகைநுதர்பெண்களாடி யிளைப்பாறுமேடைகளும்
கல்விப்பயிலுங்கனமானசங்கங்களும்
செல்வர்மகிழ்ந்து செருக்குநிற்சங்கங்களும்
மூலைக்குமூலை முத்துக்களஞ்சியமும்
சாலைக்குச்சாலைதங்கக்களஞ்சியமும்
வீடுகளெங்கும் விளங்குந்திருமணமும்

நாடுஞ்சிறுவர்கட்கு நல்லதிருமணமும்
மாணிக்கத்தாலிழைத்த மன்னர்மணிமண்டபமும்
ஆணிப்பொன்னாலமைத்த வாஸ்தானமண்டபமும
செண்மிழலையாருடங் தெய்வத்திருச்சபையும்
வணடுவியாராடு மன்னர்திருச்சபையும்
அன்னபயிலாடு மழகானவில்லங்களும
வண்ணக்கிளிகள்கொஞ்சும்வாகானவில்லங்களும்
போர்த்தொழிற்கற்கமன்னர் புரிந்திடநல்லிடமும்
எல்லாவளமுமிசைந்ததிருக்காசிநகர்
வல்லாண்மைமன்னர்பலர் வந்துபணியுநகர்
இன்னதிருநகரி லெண்ணும்வரன்முறையால்
தன்னந்தனியே தனிச்செங்கோல்தான்செலுத்தும்
மன்னும்பொறுமையிலே வன்பூமிக்கொப்பானோன்
கன்னல்வின்மாரனைப்போற்கட்டழகுதானுடையோன்
சொன்னமொழிதவறாத சொல்லிலரிச்சந்திரன்றான்
கன்னன்கொடைமாறக் கனகமளித்திடுவோன்
மன்னியவனபேரில்வள்ளிமணவாளனொப்பான்
சொல்லுமநுநீதியிலே தூயன்தசராசனையான்
தொல்லுலகையாளும துளசிமகாராசன்
மங்காதகீர்த்திநெறி மாநிலத்தையோர்குடைக்கீழ்
செங்கோல்செலுத்திச் செடம்பெற்றுவாழ்நாளில்

அரசிருக்கை.

சொல்லமைச்சர்சூழ்ந்துவரத்துளசிமகாராசன்
வல்லமுடிதரித்து வணசெங்கோல்கைப்பிடித்து

ஆலவட்டஞ்சாமரைக ளணியணியாய்வீசிவரக்
கோலமுள்ளமாதர்நிறை கும்பமெடுத்துவர
ஆலாத்திதீப மரிவைமார்தாங்கிவர
சீலமறையோர்கள் செயவாழ்த்துகூறிவரக்
கன்னியர்களாடிவர கணிகைமார்பாடிவர
மன்னர்படைநெருங்க மற்றுமுள்ளோர்தானெருங்க
வட்டக்குடைபிடிக்க வாள்வீரர்தான்துடிக்க
பட்டுக்கொடிபிடிக்கப் பலவிருதுகாண்பிடிக்க
பற்பலவாத்தியங்கள் பரவைபோற்சத்தமிட
சொற்புலவோர்நாற்கவியிற் சொல்லித்துதித்துநிற்க
சின்னங்களெல்லாஞ் சிறப்பாய்பிடித்துநிற்க
மன்னியநாற்சேனை வகைவகையாய்சூழ்ந்துநிற்க
அட்டசிங்கந்தாங்கு மாஸ்தானமண்டபத்தில
பட்டமன்னரோடுமன்னர்பண்பாய்க்கொலுவிருந்தார்
மண்டலத்தைதானமதிக்கும் மன்னன்மணிமுடிதான்
கடலெல்லாம்தானமதிக்கும காவலன்றன்கையாழி
வாகுவலயமுந்தான வானுலகந்தான்மதிக்கும்
சேகுவயிரமணி செகத்தைவிலைமதிக்கும்
மார்பிற்பதக்கநிறை மதியொளியைமாற்றிவிடும்
சோர்விலொளிமணிகள் சூரியனைத்தோற்கடிக்கும்
இந்தவகைப்பணிக ளிட்டிருக்கும்மன்னவன்முன்
பந்தமொடுதேசமன்னர் பகுதிகொடுத்துநிற்க
கட்டியர்களெச்சரிக்க கைதட்டிகூடிநிற்க
நட்டுவர்பின்மாதர்பலர் நாட்டியங்கள்செய்துநிற்க

வெள்ளித்தடிக்காரர் விதவிதமாய்வந்துநிற்க
துள்ளும்படைவீரர் துடிப்புடனேவந்துநிற்க
சேனைத்தலைவரெல்லாம் திறமுடனேசேர்ந்துநிற்க
யானைத்தலைவரெல்லா மஞ்சலொடுசேர்ந்துநிற்க
தையலர்கள் சங்கீதம் தானபாடிமுன்புநிற்க
மங்களவாழ்த்துநிறை மங்கிலியர்வாழ்த்திநிற்க
சங்கையில்லாமல்பல தானங்கொடுத்துநிற்க
எங்களரசனா ரிருக்குமந்தவேளையிலே
பொங்கமுடனவ்வரசன் புத்திரனில்லாமையினால்
வேதாந்தவேதியரை வேதப்பிராமணரைக்
சாதகரைமற்றுமுள்ள சாஸ்திரத்தில்வல்லவரைப்
பார்த்தேயொருவார்த்தை பார்த்திபனார்சொல்லலுற்
றார்-கீர்த்திபெற்றவிற்பனரே கேள்வியினில்வல்லவரே
அறுபத்துநான்குகலை யாவுமுணர்ந்தவரே
மறுவில்லாவெனகுடிக்கி மைந்தனில்லாமையினால்
சிந்தைதளர்ந்து திகில்கொண்டேன்பலனாளும்
எந்தவழியும்பிள்ளை யெய்துவழிசொல்லீரென்று
பூதலமாளுங்காசிப் பூபாலனசொன்னவுடன்
வேதப்பிராமணர்கள் விற்பனர்கள்சொல்லலுற்றார்
அட்டதிக்காளும்வல்ல வரசர்சிரோமணியே
பட்டந்தனக்குபிள்ளை பண்பாகவேண்டுமென்றால்
காசிநதியாடிக் கருதுமுக்காலையிலும்
ஈசன்விசுவநாத ரெழிலானசந்நிதிக்குள்
சென்று அபிஷேகமுதல் செய்விததுபின்சிவனை

என்றும்வணங்கியார்க்கு மெண்ணான்குதருமஞ்செய்து
அவனியொருகுடைக்கீழாளமகனைபிறப்பான
சிவனருளாலேயுமக்குசெல்வன் பிறக்குமென்றார்
சாஸ்திரிமார்கள்சொன்ன சன்மார்க்கச்சொற்கேட்ட
மாத்திரந்தீர்த்தமாட மன்னனெழுந்திருந்தான்

தீர்த்தபகிமை,

கன்மவினைகளெல்லாங் கட்டறுக்குங்காசிநதி
தன்மஞ்செய்வோர்க்குமுத்தி தானளிக்குங்காசிநதி
பிள்ளையில்லார்மூழ்கிற் பிள்ளைதருங்காசிநதி
வள்ளல்சடையினின்று வந்துலவுங்காசிநதி
பிரியமுடன்மூழ்கிற் பிறப்பறக்குங்காசிநதி
அரிக்குமொருபதவி யளித்திட்டகாசிநதி
இத்தநதியாட வேந்தன்மனைவியோடும்
அந்தவினத்தோடு மளவில்சனத்தோடும்
வந்துநற்கங்கைதனில மனைவிகரம்பிடித்து
சிந்தைமகிழ்ந்துதிவ்விய தீர்த்தத்திலாடியபின்
பல்லாயிரங்கோடி பிராமணர்க்குதானஞ்செய்து
இல்லார்பல்லோர்க்குதானம ஏகமாய்ச்செய்தபின்பு
காசிவிசுவநாதர் கனகோபுரங்கள்கண்டு
ஆசையுடன்வணங்கியக்கோயில்நாடிமன்னன்
மன்னர்புடைசூழ மந்திரிமார்தான்தாழ
சந்நிதிவீதியிலே தார்வேந்தன்வந்தபின்பு

தலமகிமை.

அண்டத்தளாவும்பல வானபொற்கோபுரமும்
எண்டிசைக்குந்தோற்றுசெம்பொனிலங்குந்திருமதிலும்
சொற்கத்தளாவிநிற்குந் துவசமணித்தம்பங்களும்
கற்களிழைத்திருக்குங் கனமானஸ்தூபிகளும்
எங்குஞ்சிவாலயமு மெழிலான லிங்கங்களும்
தங்கக்கந்போட்டிருக்குந் தளவரிசைசித்திரமும்
மூலைக்குமூலை முத்தாலவிளக்குகளும்
சாலைக்குசாலை கங்கவிளக்குகளும்
தேர்விளக்குஞ்சீர்விளக்குந் திருவாட்சிகல்விளக்கும்
பார்விளங்கக்கோபுரத்தில் பதித்தவிளக்குகளுந்
சொல்லுநவமணிகள் சொலிக்கும்விளக்குகளும்
இல்லாவிளக்குமிந்த ஈரேழுலகிலில்லை
எல்லாப்பொருளுமிந்த ஈசனார்நற்றலத்தில்
அல்லும்பகலும்பகுத் தறிவாகசந்நிதியின்
வாழுமறையவர்கள் வரிசையெடுத்துபலர்
சூழும்படியரசன் சமுகத்தில்வர்துவாழ்த்தி
அந்தமறையோர்களரசனைக்கோயிலுள்ளே
சிந்தைமகிழ்ந்துதவஞ் செய்யச்சிவலிங்கமுன்
கொண்டுவிடத்தபின்னற் கொற்றவனுங்கைகுவித்துத்
தொண்டுபுரிந்துசிவன் தங்கலடிதொழுதான்

மூர்த்திமகிமை.

கண்டார்தமக்குமுத்தி களித்தருளுங்காசிலிங்கம்
தொண்டுபுரிந்தோர்க்கு சொற்கம்கொடுக்குமலிங்கம்

க்ஷேத்திரத்திற்சேர்ந்தோர்க்குச் சிவலோகமீயுலிங்கம்
தோத்தரித்தபேர்களுக்கு சூழ்வினைநீங்குமலிங்கம
வேண்டும்வரங்களெல்லாம விரும்பிக்கொடுக்குலிங்கம்
யாண்டுமபிறவாததனமையர்க்கும்கொடுக்கும்லிங்கம்
எந்தத்தலத்துமிணையிலலாப்படிகலிங்கம
இந்தத்தலத்துமேனமை யெய்தும்விசுவலிங்கம
தன்னைப்பணிந்தரசன் றாழ்ந்துவணங்கிவீழ்ந்து
என்னைக்காப்பாற்றிபிள்ளை யீந்தருள்செய்யுமென்று
பூசைநைவேத்தியங்கள்புரிவித்துநல்லிசைகள்
ஆசையுடன்பாடி யானந்தக்கூத்தாடி
காவலரண்மனைக்குள் காவலனும்போய்புகுந்து
ஆவலுடனேயன்ன மருந்திக்கொலுவிருந்து

அரசன்முப்பத்திரண்டறமுஞ்செய்தல்.

மந்திரிமார்களைத்தான் வகைவகையாய்வரவழைத்து
தந்திரிமாரொருவார்த்தைதனையாகசொல்லலுற்றார்
வேதியர்கள்சொன்ன விதிப்படிக்குதர்மஞ்செய்ய
நீதிமன்னர்பக்கலிலே நின்றவரைப்பார்த்துரைப்பான்
அடிக்கடிக்குநலமதிசொல்லமைச்சர்களேகேளுங்கள்
படிக்குள்விளங்குகின்ற பலமானதானமெல்லாம்
என்பெயராலட்டதிக்கு மெழில்பெறவேசெய்வீரென
கனமதிசேர்மந்திமார் நராதிபனுர்சொற்கேட்டு
மண்டலமெங்கும் வகைவகையாய்க்கோயில்களும்
கண்டங்களொன்பதிலுமகனத்தமடந்தடமும்
பட்டத்தரசரெல்லாம் பார்த்துமேதான்மகிழ

கோடிப்பிராமணர்க்குக் கொடுத்தான்பலகோடி
தேடிப்பலதருமுஞ் செய்துவிட்டான்தேர்வேந்தன்
கன்னிகாதானங் கணக்கில்வொருகோடி
அன்னமிடுதான மளவில்பலகோடி
பூதானமவேதியர்க்குப் போற்றும்பலகோடி
கோதானமந்தணர்க்குக் கொடுத்தான்பலகோடி
நீர்ப்பந்தல்பூமியெங்கும் நிகரில்பலகோடி
மோர்ப்பந்தல்புவியில் மொழியிற்பலகோடி
அறவைப்பிணஞ்சுடுத லதுவும்பலகோடி
பறவைச்சிறைவிடுதல் பாரில்பலகோடி
கண்ணாடிகாதோலை கண்மருந்துபெண்மோகம்
வண்ணானொடுகண்ணுமயிரின்சிறைகளைதல்
விலங்கிற்குணவு விலைகொடுத்தேயுயிர்காத்தல்
துலங்குமகப்பால்கொடுத்தல் சோலைசிறைச்சோறிடுத
ல்-தென்பண்டநல்கல்தேர்வடைத்தலையுமிடல்
வண்கல்விமோர்க்குணவு வாய்த்தபசுவிற்குப்பால்
இத்தவகைதருமமிறையவன்கொடுத்தபின்பு
சுந்தரமுடன்சிவனை யரசன்மனைவியொடும்
சந்ததமுங்காசியில்வாழ் சங்கரனைத்தானோக்கி
சிந்தைமகிழ்ந்து செய்தார்ப்பலவிரதம்
அந்தவகைபுரிந்தே யாதிசிவனைக்கேட்டோர்
சந்தானங்காசியண்ணன் தாமலைவிக் கொடுத்தார்

மதுரைவீரசுவாமிஉற்பத்தி

மேகந்தனைப்பழிக்கு மெல்லியார்கூந்தலினால்
சோலைமயிலைப்பழிக்குஞ் சொல்லரியசாயலினாள்
இந்திராருகமொப்பாக விளங்குமழகுடையாள்
அன்னந்தனைப்பழிக்க வசைசந் திருநடையாள்
மின்னலினைப்பழிக்கு மேகலைப்பூநுண்ணிடையாள்
பம்பரத்தைதானபழிக்கும் பனைத்தவிளமுலையாள்
செம்பொற்சிலை சுரக்குமொழிற்கலையாள
கம்பவாழைத்தொடையாள் கற்புமிகுநிலையாள்
துளசிமகாராசனுக்குச் சொல்லுமுயிர்த்துணையாள்
வளமிகுந்தகற்பூர வல்லிதிருவயிற்றில்
கங்கைபணிசிவனருளால் கருத்திரளைசோலையிலே
மங்கைக்கரசி மதிமயக்கமானாள்காண்
மூன்றாந்திங்களிலே முலைகருத்துமுகம்வெளுத்தாள்
தோன்றுமயக்கமிகத் தோற்றமுறவாடிநின்றாள்
நான்கான திங்களிலே நன்மசக்கைகொண்டாள்காண்
தேன்கதலிமாவருக்கை இத்திப்பிலிச்சைகொண்டா
ஐந்தான திங்களிலே யம்பொன்போல்மேனிகொண்டா
சிந்தாகுலமிகுத்துச் சிந்தைமிகத்தளர்ந்தாள்
ஆறான திங்களிலே படிவயறுதான்தளர்ந்தாள்
வீரானவேழுதிங்கள் மேவவிடைசிறுத்தாள்
எட்டான திங்களிலே யெண்ணாதுமெண்ணிநின்றாள்

ஒன்பதாந்திங்களிலே யுறக்கமிகவிடுத்தாள்
பத்தானதிங்களிலே பாலகனைப்பெற்றெடுத்தாள்
முத்தானவாய்திறந்து மொயமகனுந்தானமூதான்
ஆயிரங்கோடி அழகுள்ளசூரியன்போல்
யாயிருஞாலத்தில் வாய்க்காதரத்தினம்போல
தங்கத்தைதக்காச்சித்தரையில்கவிழ்த்தாப்போல்
ஒருகோடிசூரியனை யுருக்கிக்கவிழ்த்ததுபோல்
இருகோடிசந்திரனை யெடுத்துக்கவிழ்த்ததுபோல்
கோடிமணிகளைக் கொண்டுதிரண்டதுபோல்
நீடியபூமியிலே விருபன்பிறந்தவுடன்
தேவாதிதேவரெல்லாந் தேன்மாரிதான்பொழிந்தார்
பூவுலகமெல்லாம பூமாரிதான்பொழிந்தார்
அந்தரதுந்துமிகளொந்துமுழக்கிவிட்டார்
இந்திரன்றன்முதலோரெல்லோரும்வாழ்த்தலுற்றார்
மண்டலத்திலுள்ளவர்கள் மங்களவாழ்த்துரைத்தார்
விண்டலத்திலுள்ளவர்கள் விதம்விதமாய்வாழ்த்தின
றார்,பாலகனைப்பாரிலுள்ளோர்பலரும்வந்துபார்த்தார்க
ள்-மாலைசுற்றித்தான்பிறந்த மைந்தனைபார்ப்பார்கள்
கொடிசுற்றித்தான்பிறந்த குழந்தைதனைப்பார்த்தார்க
ள்-துடியிடையாள்தோழிமார் துரிதமுடனோடிவந்து
தொல்லுலகையாண்டுவருந் துளசிமகாராஜன்
வல்லகரங்குவித்து வாழியென்றுவாழ்த்தலுற்றார்

வடிவுபெருவதற்கு மற்றைக்குறைவில்லையே
என்றந்ததாதியர்க ளெந்தனுக்குசொன்னவுடன்
குன்றனையதோள்நிமிர்ந்து கொற்றவனார்தான்மகிழ்ந்
தார்-பிள்ளைபிறந்ததென்று பேரரசர்தாங்களித்தார்
கொள்ளைகொடுத்தார் குறைவில்லாக்களஞ்சியத்தை
சீனிசருக்கரையை திக்கெட்டும்வழங்கிவிட்டார்
மாநிலத்திற்பின்னு மனமகிழ்வாய்ப்பிரித்துவிட்டார்
அந்தப்புரத்தி லரசரெழுந்தருளிச்
சாந்தமுள்ள தாதியரைத் தானழைத்துதன்மகனை
எடுத்துவரவே யிறைவர்திருவாக்களித்தார்
அடுத்திருந்ததாதியர்க ளப்போதேகொண்டுவந்து
மன்னவர்முன்பாக வைத்தார்பூந்தொட்டிலுள்ளே
சின்னக்குழந்தை திருமுகத்தைதான்பார்த்து
என்றுமடையாத வெக்களிப்புத்தானடைந்து
நின்றுமகிழ்ந்து நெடுநேரந்தான்பார்த்து
கொண்டுபோமென்றுசொல்லி கொலுவிலரசன்வந்து
மண்டலத்தையாளும்வல்லமந்திரியைத்தானழைத்து
சோதிடத்தில்வல்லவரை சுருக்கிலழையென்றுசொன்
நீதிதவறாவமைச்ச னிருபனார்சொற்படிக்கு (னார்
சோதிடரைத்தானழைத்தான் சோதிடருமோடிவந்து

ஆசியுரைத்துமஞ்சளட்சதைவேந்தர்க்களித்தார்
மன்னன்மணியாசனத்தைமறையோர்க்குத்தான்சொடு
த்தான்-என்னையழைத்தவித மென்னென்றார்சோதிட
ரும்-அந்தமொழிகேட்டே யரசன்விளம்பலுற்றான்
வெள்ளிக்கிழமைதனில் விடிந்துபத்துநாழிகையில்
வள்ளல்கழுத்திலே மாலைசுற்றிதானபிறந்தான்
திதிகரணமவாசஞ் சிறந்தபோகமிலைநாள்
தரியறிந்துபஞ்சாங்கச்சாஸ்திரத்தைப்பாருமென்றார்
அப்படியேசோதிடநூ லந்தணருந்தான்பார்த்து
செப்பருகோளுந்தங்களுந் திதிவாரந்தெங்கெனவே
சோதித்தறிந்தபின்பு அளசிமகாராசனும்
பேதிக்கசோதிடரும் பேசத்தொடங்கலுற்றார்
திக்கெட்டுங்கீர்த்தி செலுத்துஞ்செங்கோல்வேந்தே
தக்கதவமபுரிந்து தான்பெற்றபிள்ளையது
சனனமெடுத்ததினந் தாரணிக்கேயாகாது
கனமானபொல்லாங்கு காசிநகர்க்கெய்துவிடும்
நாளுங்கோளும்பிறந்த நாட்டுக்கேயாகாது
மீளும்பெரும்போரு மிகச்சிரியபிள்ளையினால்
மூழந்தையைவைத்திருந்தால் கோத்திறத்திற்காகாது
இழந்திடுவீர்நாடுநக ரிக்குழந்தைதன்னாலே
அருமகனைவைத்திருந்தா லரண்மனைகள்வெந்துவிடும்
தருமகனைவைத்திருந்தால் சீமையெல்லாம்வெந்துவிடு
என்றுமிகவுரைத்தா ரெழிலானசோதிட்ரும் (ம்
குன்றிவயிரெரித்து கோபமிகக்கொண்டரசன்

அந்தமொழிகேட்டே யடித்தலறிதான்விழுந்தார்
சிந்தைதளர்ந்து தியங்கிமதிமயங்கி
அப்பாமகனேயென்றேயபயமிட்டுத்தான்புலம்பி
எப்படிஎன்னசெய்வேனிப்பிழையேயெனவேசொல்லி
அங்கவுலகாளுந் துளசிமகாராசர்
அங்கமவியர்த்தே யவதிதனிற்புரண்டு
வாயிலேமண்ணை வாரியடித்தார்காண்
கோயிலிற்றெய்வமெல்லாங்குறித்துமிகவைத்தார்காண்
பேச்சுமூச்சில்லாமற் பிணம்போலுமானார்காண்
பூச்சக்கரமாளும் புகழ்காசிமன்னவனார்
மந்திரிமார்களெல்லா மனதுமிகக்கலங்கி
அந்தவரசனருகினில்சென்றெழுந்து
சொக்குப்பொடிகாதிற் சொரிந்துவாயாலூதி
இக்காளுமன்னவரைத் தெளிந்துவிடச்செய்தார்கள்
சோகமதுதீர்ந்து துளசிமகாராஜர்
தாகந்தெளிந்துமவர் தனியாயெழுந்திருந்து
கோடிதருமஞ்செய்துங் கொடும்பாவியானேனென்றார்
நாடித்தவம்புரிந்து நான்பாவியானேனென்றார்
முப்பிறப்பிற்செய்தவினை மூண்டதென்றாலிப்பிறப்பில்
நற்பிள்ளைதன்னையினி நான்செய்வதென்னவென்றார்
வந்தவருஞ்சோதிடர்கள் மன்னவரைத்தான்பார்த்து
இந்தமகனையினி யிங்குவைக்கலாகாது
எந்தவிதமும்பிரர்க் கீந்திடலுத்தமமாம்
அந்தவிதமன்றிக் காட்டகத்தில்விடமத்திமமாம்

என்றுமுறைபெரியோரெடுத்துரைத்தாரிவ்வார்த்தை
குன்றனையதோள்வேந்தர் கோவென்றழுதுவிம்மி
ஐயையோதெய்வமேயடாதமொழிகேட்டேன்
உய்யும்வகையறியேனே கோகோவென்னசெய்வேன்
இந்தபிள்ளையைக்கொடுகக எவருக்குமனந்துணியும்
பிறந்தபிள்ளையைக்கொடுக்கப்பேருலகிற்றுணிவாரோ
உயிரோடுபிள்ளைதனை ஒட்டிவிடவெண்ணுவாரோ
ஆருலும்பாவியென்போ லம்புவியில்கண்டிலனே
தேனுறிகழுமுடிச் சிவனார்செயலிதுவோ
வேதன்விதித்த விதியினபயனிதுவோ
ஏதுமறியேனென்றே யிறைவர்மனந்துணிந்தார்
மதுரைவீரசுவாமியை வனத்தில்விடச்சென்று
தூதுவரைவிட்டரசர் தோழிகளைவரவழைத்து
மாதுகற்பூரவல்லி மைந்தனைப்பொற்றட்டிலவைத்து
மேதினியோர்காணமல் மிகவிருண்டநாட்டினுள்ளே
காதல்திருமகனைக கையிலேந்திக்கொண்டு
வாருங்களென்றுசொல்லி மன்னவர்க்குவாக்களித்தார்
காருமவண்டோடுங் கருணைகூர்ந்தார்றோழியர்கள்
அந்தமொழிகேட்டேயந்தப்புரஞ்சேர்ந்து
கன்னிகற்பூரவல்லி கனிவாசற்றான்புகுந்து
கண்ணீர்ததும்பிடவே காயம்நடுங்கிடவே
வண்ணமுகஞ்சேர்ந்து வாடிமிகவழுது
செல்வன்பிறந்தினந் தேசத்துக்காகாதென்று
வல்வேந்தன்மகனை வனத்தில்விடவாக்களித்தார்

எங்கட்கரசியரே யாங்களென்னசெய்வோமம்மா
செங்கோலரசது சிந்தமரியோமம்மா
என்றந்ததாதியர் யிபம்பும்முறைகேட்டு
குன்றினையொத்தஸ்தனத்தாள் கூக்குரலிட்டேயழுது
கண்ணிலறைந்துகொண்டாள் கையைமுறித்துநின்று
ள்-மண்ணில்விழுந்தழுதாள் மார்பிலடித்தழுதாள்
கூந்தல்விரித்தரசி கூச்சலிட்டுதானழுதாள்
ஏந்திழைமார்களேயான் என்செய்வெனென்றழுதாள்
மைந்தன்றனையிழந்த மாபாவியென்பாரே
அழகுபலனில்லாத அரும்பாவியென்பாரே
காட்டில்மகனைவிட்ட கடும்பாவியென்பாரே
நாட்டிற்பலபேர்கள் நகைத்திகழ்ந்துசொல்வாரோ
என்னசெய்வேன்சிவனேயெனவேங்கிமிகத்துடித்து
தன்விதியைத்தானினைந்து சலித்துமனதுநொந்து
முட்டியழுதாள்மகன் முகம்பார்த்துதானழுதாள்
கட்டியெடுத்துமகன் கண்முகத்தைபார்த்தழுதாள்
அப்பாமகனேயென் னருமைத்திருமகனே
இப்பாரையாளவந்த வெங்கள்குலக்கொழுந்தே
தேடக்கிடையாத செழுந்தேனேதெள்ளமுதே
நாடாளவந்தவெங்க ளுபகளைநற்றிருவே
தவமாத்தவமிருந்து தான்பிறந்தரத்தினமே

அவமானகாட்டில்விட அரசன்மனங்கொண்டானோ
மாபாவியென்வயிற்றில் வந்துதித்தபாக்கியமோ
பூபாலருனைவனத்தில் போக்கிவிடசொன்னாரோ
இத்தவிதிக்கோநீ என்வயிற்றில்வந்துதித்தாய்
அந்தபிரமனுக்கு வமைத்தவிதியிதுவோ
பிள்ளையில்லையெனற முன்னாள் பெருந்தவசுதான்புரிய
வளையில்லையென்று பலவகைவிரதநான்புரிந்தேன்
ஐயோதிருவுளமே ஆதிசிவனேயென்று
கையைநெரித்துக் கத்திச்சலித்திளைத்தாள்
பக்கலிலேநின்றிருந்த பாங்கிமார்தாமெடுத்து
மிக்கதுயர்நீங்க மெல்லியரைத்தேற்றுவித்தார்
பட்டத்துமன்னர் பலராஜாமந்திரிகள்
இட்டமுடன்சேவகர்கள் சேனைத்தலைவர்மற்றோர்
கற்பூரவல்லியவள்மனையினுட்புகுந்தாள்
கற்பூரவல்லியருங் கணவனையேகண்டழுதாள்
அளசிமகாராசர் துயரமிகவடைந்து
தளராதேயென்றந்தத் தையலரைத்தேற்றுவித்து
மன்னன்மனைவியரு மண்ணுருகத்தாமழவே
அன்னைதுயர்கண்டு அனைவோருமேயழுதார்
பட்டணத்திலுள்ளவர்கள் பார்த்துமிகவழுதாள்
சொர்ணமுடிமன்னரெல்லாஞ் சூழ்ந்துமிகவழுதார்
அப்போதுதங்கத்தினு லமைந்திலங்குந்தட்டினுள்ளே
இப்போதுபாலகனை எடுத்துவளர்த்துமென்று
பாங்கியர்க்குப்பார்வேந்தர் பகர்ந்திட்டாரப்பொழுது

தாங்கிறாம்மகளைத் தாதியர்பொற்றட்டில்வைத்து
மன்னவர்துளசிமகாராஜர்முன்புவைத்தார்
அன்னவரசாணிமுத்துப் பல்லக்கைகொண்டுவாரச்
சொன்னவுடன்கொண்டு வந்தார்கள்பொற்சிவிகை
மண்டலமாளு மகுடமன்னரக்கணமே
மன்னுமுத்துதண்டிகையில் பைந்தளையேற்றுவித்து
இந்தக்குழந்தைகளை எல்லோருங்கொண்டேகி
காட்டில்விட்டுவாருமென்று கட்டளையிட்டார்ராஜர்
கேட்டவர்கள்செங்கோலின் கீழ்ப்படிந்துபோகலுற்று
ர், முத்துச்சிவிகையைச்சூழ முடிமன்னர்முக்கோடி
யானையொருகோடி யணிந்ததேரிருகோடி
சேனைபலகோடி செயவீரரெண்கோடி
ஆட்ல்பாடல்களு மதிர்வேட்டுக்கோஷ்டமுடன்
கூட்டமுடன்மகனை கொண்டுநடக்கலுற்றார்
காசிநகரம்விட்டுக் கடுகவெளியில்வந்தார்கள்
தேசிலகுமன்னர்வாழ் சிறப்பானவீதிவிட்டு
யானைவிலைமதிக்கு மழகுமன்னர்வீதிவிட்டு
சேனைத்தலைவர்வாழுஞ்சிங்காரவீதிவிட்டு
குதிரைவிலைமதிக்குங் குச்சிலியர்வீதிவிட்டு
சதுரில்நடனமிடுந் தாசியர்கள்வீதிவிட்டு
போட்டசட்டைவாங்காத பொந்திலியர்வீதிவிட்டு
கொட்டிப்பலதொழில்செய் கொல்லர்வாழ்வீதிகளும்
காசிநகரைவிட்டுக் கானகத்திற்போய்புகுந்து
தேசமன்னரெல்லவருஞ் சிறந்தவனம்புகுந்து

காரைபடர்ந்தவனங் கருங்கிளாபூர்க்கும்வனம்
கூரைபடர்ந்தவனஞ் சுண்டக்காய்காய்க்குமவனம்
குன்றுமலைகளிலே கொடும்புலிகள் குழுமவனம்
ஆறுமடுவுகளு மழகாய்நிறைந்தவனம
கூவுமபெருமிருகங் குலாவியிருக்குமவனம்
சிங்கமபுலிகரடி செந்நாய்நெருங்குமவனம
எங்கும்விஷப்பாமபு இருந்துஉலாவுவனம்
இன்னமபலமிருக மிருக்கும்வனங்களிலே
மன்னுமகளை முத்து வளைசிவிகையோடிரக்கி
இட்டருள்ளநல்லிடத்திற்றெறிந்துமவர்பார்த்து
பொன்றட்டோடிபாலகனைப் புகழாகவேயெடுத்து
மண்ணில்வைத்துப்பாலகன்றன்மதிமுகத்தைப்பார்த்
தார்கள்-கண்ணீர்சொரிந்தார் கதறியழுதார்கள்
திரண்டுவந்தசேனைகள்தான் திகிலடைந்துதாமழுதார்
இருண்டவனந்தனிலே எல்லோருந்தாமழுதார்
காட்டைவிட்டுநாட்டிற் கடுகநடந்தார்கள்
மலைகள்குகைகடந்து வந்தார்கள்பட்டணத்தில்
கோட்டையிற்செல்லுதற்குக் குறுகிநடந்தார்கள்
உலகாளும்மன்னவர்க்கு உத்தாரஞ்சொன்னார்கள்
அவரவர்வாழத்திடலே யன்பாயிருந்தார்கள்
நகையில்லாப்பாலனுக்கு நடக்கின்றவாறுசொல்லேன்

மதுரைவீரனுக்கு நாகமுதவிசெய்தது,

பாலகனுமப்போது பாரவனந்தனிலே
ஓலமிட்டுதானலறி ஓங்கியழுகையிலே

மாமரத்தின் நிழலிலே மைந்தன் தனித்திருந்து
தாமரைநீர்போல தயங்கியழுகக்கண்டு
மாணிக்கநாகமது மனதுமிகவுருகி
ஆணிப்பொன்போல்விளங்கு மாசன்மைந்தன்பக்கலி
வந்துபடம்விரித்து மதிமுகத்தைதான்பார்த்து லே
அந்தக்குழந்தைக் கரியமுத்தந்தானகொடுத்து
பந்தியும்யோகமும் பொருந்தியிருப்பதற்கு
நாக்கில்சரஸ்வதிதான் நன்றாகததான்விளங்க
முகத்தில்திருவழகு முன்னின்றுதான்விளங்க
எதிர்த்தவரைவெல்ல ஏமனதுஅட்சரமும்
நீச்சனிடவீட்டில் நிச்சயமாய்த்தான்வளர்ந்து
அலங்காரவீரனென்று ஆனதொருபெருமைவைத்து
மன்னர்களைவெல்ல மந்திரவான்கைகொடுத்து
வீரப்பனென்றுசொல்லி விதமாய்மதுரையிலே
பூசைப்பலிகொடுத்து போற்றித்துதித்திடவே
இறந்துபுவியோரை என்றென்றுங்காத்திடவே
மீனாட்சிகம்பத்தடி விளங்கவேநீயிருப்பாய்
முன்பூசைகொண்டு முப்பூசைதான்பெருவாய்
பத்துவயதினிலே படைமுகமும்வென்றிடுவாய்
கள்ளரைவென்று கனமதுரையாண்டிடுவாய
பெண்களினாலே பெருமைபதத்தைச்சேர்ந்திடுவாய்
என்றுமேசொல்லி இனிதாகத்தான்வாழ்த்தி
தேவாமிர்தத்தைத் தினந்தோறும்தான்புகட்டி
இப்படியாக இருக்குமந்தவேளையிலே

மதுரை வீரனை சக்கிலிச்சி கண்டெடுக்கிறது.

காசிநகரைச்சேர்ந்த கனமாயகண்டதொரு
பாலைவனத்திலே பாதராட்சைதைத்தவளர்
மாதிகச்சின்னான் மனைவியாமசக்கிலிச்சி
மைந்தனில்லையென்றுசொல்லி மயங்கியேதானிருந்து
பாதரட்சைதானம் பரிவாகத்தான்கொடுத்து
காசிவிஸ்வநாதனையும் கனவிசாலாட்சியையும்
பூசையனுஷ்டானம் புதியதவம்புரிந்து
மாதிகன்தேவியும் மன்னனும்தரைமெழுகி
போசனஞ்செய்து புண்ணியமிகச்செய்து
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே
பாங்கானமாதிகனும் பாதரட்சைதைத்துடனே
வாருகளும்சம்புகளும்வகைவகையாய்வூரவைக்க
ஆவாரம்பட்டைக்கு அன்புடனேபோவென்றார்
நலமென்றுசொல்லி நலமுடனேமங்கையுமே
அசைந்துநடந்தாளே அந்தவனந்தானோக்கி
காசிநாடாளுமன்னன் கண்மணிக்குநேரான
பாலகனிருக்குமந்தப் பாரவனமநோக்கி
வழிகூடிப்போகையிலே மங்கைநல்லாளப்போது
காணுநற்சகுனங் கண்டாளேகண்களிக்க
காகம்வலமாச்சு காடையிடமாச்சு
மங்கிலியப்பெண்கள் வாழ்த்திவரக்கண்டாளே
தையனல்லாள்தானுந் தண்ணீரைத்தான்கொண்டு
நிறைகுடங்கொண்டு நேராகத்தான்வரவே

கண்டுமனமகிழ்ந்து காரிகையுமப்போது
அசைந்துநடந்தாளே அன்னம்போல்வனத்திலே
காட்டில்புகுந்தாளே காரிகையுமப்போது
அரிவாளுங்கைபிடித்து ஆவாரம்பட்டைவெட்ட
பட்டையெடுத்துகட்டி பயணமதாய்வருகையிலே
மாமரத்தின்கீழே மைந்தன்தனைக்கண்டாள்
நாகத்தைப்போற்றிசெய்துநலமுடனேதெண்டனிட்டு
மன்மதனுக்கொப்பான வடிவுள்ளபாலகனைக்
கண்டுமனமகிழ்ந்து காரிகையுமப்போது
பிள்ளகலிதீற்கவந்த பெருமையுள்ளமைந்தனென்று
வாரியெடுத்து மார்போடேதானணைக்க
பைங்கிளியாள்தன்னுடனே பசுமைநிறந்தாளுச்சு
பாரஸ்தனங்களிலே பாலுஞ்சொரிந்திடவே
பாலகனும்பால்குடித்துப் பசியாறினபின்பு
கோலமயிலனையாள் குளிர்ந்துமனமகிழ்ந்தாள்
பாலகனைமடியில்வைத்துப் பட்டையுந்தானெடுத்து
வேர்த்துவிரிவிரித்து வீட்டுக்குவாராள்காண்
இவள்-வருவதற்குள்ளாக இன்னேரமென்னவென்று
சந்தேகந்தான்தோன்றிச் சக்கிலியன்தானெழுந்து
கையில்தடியெடுத்துக் கனத்ததொருதோளில்வைத்து
பூமியதிர்ந்திடவே பொற்கொடியைத்தான்தேடி
கோபமிகக்கொண்டு கொம்பனையாள்முன்னேவந்து
இந்நேரங்கானகத்தி லென்னசெய்தாயென்று
சக்கிலியன்தானுந் தடியெடுத்துநோக்கையிலே

அடியாதேயென்கணவா அதிசயஞ்சொல்லுகிறேன்
கோபத்தைதானடக்குங் குணமுள்ளபத்தாவே
மைந்தனில்லாததினல் மாதவங்கள்செய்தோமே
பிள்ளைகவலை பெருங்கவலை தீர்ந்ததிப்போ
ஆதிசிவன் கர்த்தர்நமக் காண்பிள்ளைதான்கொடுத்தார்
மாணிக்கம்போலிந்த மைந்தன்தனையளித்தார்
இந்தாருமபிள்ளையென்று ஏந்திழையாள்தான்கொடுத்
தாள்-தட்டோடேபாலகனை தான்வாங்கிசக்கிலியன்
இனபக்கடல்குளித்து இருபுஜமும்பூரித்தான்
வீட்டிலேதானவந்து மெல்லியுடனசின்னணும்
சக்கிலிச்சிகையில் குழந்தைதனைக்கொடுத்து
தச்சனொருவனைப்போய் தானழைத்துவந்தான்கான்
மைந்தனுக்குத்தொட்டில்வளமுடனேசெய்யுமென்றா
ன்-அப்படியேதச்சனமைத்தானேதொட்டிலுமே
மாணிக்கத்தைப்புதைத்து வச்சிரத்தால்பூண்கட்டி
பச்சைமரகதமும் பாங்குடனேதானமைத்து
தங்கக்கொலுசுசெய்து தான்பூட்டிதச்சனுமே
கொடுத்திடவேமாதிகனுங் கோதையருமேவாங்கி
பாலகனைத்தாமெடுத்துப் பதிவானதொட்டிலிலே
கண்மணியைத்தான்வளர்த்திக் காரிழைதாலாட்டலுற்

மதுரைவீரனுக்குத்தாலாட்டல். (ருள்

ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ
புத்திரனேயுந்தனுக்குப் புகழ்ச்சியுடன்தாலாட்ட

நித்திரைநீசெய்யுமெந்த னேரானகண்மணியே
கண்ணேயுறங்குறங்கு கற்பகமேநித்திரைசெய்
கண்ணேயென்கண்மணியே கற்கண்டேசாக்கரையே
ஆதிசிவன்மகனே ஆயனமருமகனே
சோதிக்கவந்தவனே துய்யகணபதியே. (ஆ)

தேனானகண்ணே தெவிட்டாததெள்ளமுதே
பாலூறும்வாயுடைய பாலகனேபைங்கிளியே
கானகத்திற்பொங்கருடன் கவிழ்ந்துவிளையாடக்கண்டு
கானகத்தெடுத்துவந்த நாயகமேகண்வளரீர். (ஆ)

எந்தனுக்குப்பிள்ளையென்று ஈஸ்வரனார்தந்தகண்ணே
சுந்தரமாய்நித்திரைசெய் சொர்ணமயத்தொட்டிலிலே
பிள்ளைகவலை பெருங்கவலைதீர்க்கவந்த
வள்ளலேகண்ணே மணியேமணிவிளக்கே. (ஆ)

மாறுபடாபாலகனே மாசில்லாக்கண்மணியே
வேறுபடாபுத்தகமே விண்மணியேகண்வளராய்
அங்கயற்கண்ணம்மை யருள்பெற்றபாலகனே
எங்கள்குடிதழைக்க என்மகனேகண்வளராய். (ஆ)

இப்படிதாலாட்ட ஏத்தசிறுபாலகனும்
நித்திரையுஞ்செய்து நினைவுவந்தபாலகனும்
பசியெடுத்துபாலகனும் பதறியழுகையிலே
தாவியேசக்கிலிச்சி தானெடுத்துப்பால்கொடுத்தாள். (ஆ)

பால்கொடுத்துப்பசியாறிப் பாலனுக்கு அப்பொழுது
உச்சியூதித்துடைத்து உடம்பெல்லாந்தானுவட்டி
இட்டமுள்ளநெற்றியிலே திருநீறுகாப்புமிட்டு
நேரானநெற்றியிலே திலக்காப்புதானுமிட்டு
நீலவிழிகண்களுக்கு நேர்மையுடனைமையெழுதி
பிள்ளைக்குதிருஷ்டி பிரியமுடன்சுற்றதற்கு
செல்லும அருகும நேரானமஞ்சளுடன்
பருத்திவிரைசுண்ணாம்பு பரிவாகத்தான்பிசைந்து
தண்ணீர்முகந்துவைத்து தாம்பாளத்திற்கலக்கி
திருஷ்டிகழித்ததனை தெருவீதியிற்போட்டு
இப்படியாகவினிவளர்க்குங்காலையிலே
மாதிகனைத்தானழைத்து மங்கையருமேதுசொல்வாள்

மதுரைவீரனுக்கு காதுகுத்துதல்

மூன்றாம்பிராயததிலே முத்தமிட்டுகாதுகுத்த
நல்லநாள்கேட்டு நட்சத்திரந்தான்பார்த்து
இட்டமுள்ளதட்டானைச் சீக்கிரமாயழையுமென்றாள்
அந்தநல்லாள்சொற்கேட்டு ஆனதொருமாதிகனும்
கூட்டிவந்துதட்டானை குழந்தையைப்பாருமென்றார்
பார்த்துமந்ததட்டானும் பாலகனுக்கேற்றாப்போல்
தங்கத்தால்கம்பிச் சதிராகத்தான்வளைத்தான
கீழ்க்காதைமேற்காதைக் கிரமமாய்குத்திவிட்டான்
படியரிசிதட்சணையும் பாக்கிலையுஞ்சர்க்கரையும்

அத்தனையுந்தான்கொடுத்து அனுப்பினான்கட்டானை
மாதிகனுமங்கையரு மனதுமிகத்தான்குளிர்ந்து
இப்படியாக விருக்கின்றவேளையிலே

மதுரைவீரன்சக்கிலிச்சியின்வீட்டில்வளருகிறசேதி காசிராஜாவுக்குத்தெரிதல்.

காசிபட்டணத்திலிருக்குங் கனத்தவெகுமாந்தர்களின்
மாதிகச்சின்னானுக்கு மைந்தன்வந்தசேதிதனை
பட்டணத்திலுள்ளசெனம் பாங்குடனே தாமறிந்து
இராஜனிடபிள்ளையென்று நலமாகவோடிவந்து
காசிராஜாவுடனே கணக்கர்வந்துசொல்வார்கள்
மாதிகச்சின்னானும் மைந்தனைவளர்க்கிறான்
என்றவர்கள்சொல்ல இந்தச்சமையத்தில
இப்பெரியபட்டணத்தி லிருந்தோமேயானக்கால்
தன்பிள்ளையென்று தானழைத்துக்கொண்டிடுவார்
மறுதேசம்போய் மங்கையரோநாம்பிழைப்போம்
அப்படியேநல்லதென்று அன்பாயிருவருந்தான்
மைந்தனைத்தானெடுத்து மறுதேசம்போனார்கள்
காடுமலைதாண்டி கடுகநடக்கலுற்றார்
பொம்மணன்சீமைக்குப் பொட்டெனவேவந்தார்கள்
யாரென்றுசொல்லி யழைப்பித்தார்பொம்மனனும்
எந்தவூரெந்தநாடு எங்கிருந்திங்குவந்தீர்
என்றதற்குமாதிகனும் எதிருரையுஞ்சொல்லுகிறான்
காசியென்னும்பட்டணத்தைக்கடந்துவரலாற்றைக்கேள்

பஞ்சைகள்பிழைக்கப் பரதேசம்நாங்கள்வந்தோம்
வயிறுபிழைக்க மறுதேசம்நாங்கள்வந்தோம்
அந்தநல்லசேதி அறிந்தானேபொம்மணனும்
என்னிடத்திற்சேவகமாய் யிருப்பாயோமாதிகனே
அப்படியேநல்லதென்று அமர்த்தினான்பொம்மணனும்
சேவகஞ்செய்து சீருடனேதானிருந்தான
சந்தோஷமாகித் தயவாயிருக்கையிலே
பிள்ளைக்குச்சிங்காரம் பிரியமுடன்பூட்டலுற்றான்
நெற்றிக்குசுட்டிகட்டி நிழல்கண்ணாடியுங்கட்டி
காதிலேதிமத்திக்காய் கனமாகத்தொங்கவிட்டு
பச்சைக்கல்முருகு பவளத்தால்தாவடங்கள்
காலிற்சிலம்பணிந்து கைக்குதங்கக்காப்புமிட்டு
பூணாரமெல்லாம் பூட்டினான்மாதிகனும்
நாளொருமேனியுமாய் நலமாகத்தான்வளர்த்தான்
பத்துவயதானதினமே பதினாலாம்வயதுதனில்
சரிகைச்சந்திரகாவி தலைப்பாகைசுட்டியுடன்
வன்னகம்பிச்சோமன் வகையாயுடுத்தியங்கே
பட்டிகம்பிசோமன் பாங்காய்வரிஞ்சிகட்டி
இடதுபுரத்தொங்கலிலே எமனிட அட்சரமும்
வலதுபுரத்தொங்கலிலே வடமலையான் அட்சரமும்
பார்வதிகடாட்சத்தால் பரிவாகவுண்டாச்சி

பஞ்சவர்னப்பட்டாடை பாக்கானசாலுவையும்
முன்கையிற்சத்தமும் முறுக்கிவிட்டமீசைகளும்
கஸ்தூரிபொட்டுமிட்டுக் கனத்ததிருமார்பிலுமே
சந்தனமுமபனுகும் தாராளமாய்ப்பூசி
இப்படியாகவேதான் யிருந்துவருகையிலே

மதுரைவீரன்பராக்கிரமம்.

குச்சுவுருமாலைகட்டிக் கூசாமல்விரையனும்
கச்சைசவரிகதிகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
காலில்மிதியடியுங் கையிலுண்டைவில்பிடித்து
மந்திரவாளெடுத்து மதயானைபோலெழுந்து
எதிரில்தான்கண்டவரை எண்ணியேபாராமல்
கண்டமுனிராட்சதரைக் கண்டதுண்டமாக்கிடுவேன்
காளிக்கதவடைக்க கண்டமுனிதெண்டனிட
வேட்டைகளாடுவதும் வேங்கைபுலிகுத்துவதும்
மாதிகன்சொல்கேளான் வனங்களிலேபோய்விடுவான்
கரடிபுலிசிங்கம் காட்டானைகொல்கிறதும
வேஷங்கள்மாறி விட்டில்வருகிறதும்
வருகிறதைக்கண்டு மாதாமனமகிழ்ந்து
வகதொருவீரனுக்கு வரிசையுடனன்னமிட்டு
குத்துப்பருப்புமிட்டு கூசாமல்நெய்வார்த்து
சுண்டகடிவகையுஞ் சுகிப்பானபோசனமும்
வாழைப்பழஞ்சக்கரையும் வகைவகையாய்த்தானமைக்
க-சாப்பிட்டுக்கையலம்பி தாம்பூலந்தான்தரித்து

பள்ளியறையிற்புகுந்து பாங்கானகட்டிலிலே
பள்ளிகொண்டுவீரையனும் பாங்காயெழுந்திருந்து
இப்படிதானும் இருக்குமந்தவேளையிலே

தொட்டியன்மகள் ருதுவானவிடத்தில்

மதுரைவீரன் காவலிருந்தது,

பட்டணத்தையாளும் பரிவானதொட்டியனும்
பொம்மணநாய்க்கன்மகள் பொம்மியம்மாளென்பவள்
தான்-புத்தியறிந்ததின்மேல்பூவைதனைபொம்மணனும்
ஊருக்குமேற்கே ஒருநாழிதூரத்தில்
பச்சைகுடிசைகட்டிப் பண்பாயலங்கரித்து
பொம்மியம்மாளை பொங்கமுடன்கூட்டி
அந்தக்குடிசைதனில் அமர்ந்திருக்கச்செய்துவைத்து
மாதிகச்சின்னானை வரவழைத்துதன்னுடனே
அல்லும்பகலும் அறுபதுநாழிகையும்
பட்சிபரவாமல் பகல்மோசம்வாராமல்
காட்டானைசிங்கம் கரடிபுலிவாராமல்
கள்ளர்திருடர் கடும்விஷங்கள்திண்டாமல்
காத்துமழைவந்துதென்று காவல்தப்பிபோகாமல்
இருட்டுகருத்ததென்று யேமாந்திருக்காமல்
முப்பதுநாளும் முழித்துகொண்டுதானிருந்து
காருப்பிள்ளாவென்று கட்டளையுமிட்டானும
நல்லதையாவென்று நலமுடனேமாதிகனும்

மாதிகச்சின்னானும் மாளிகைக்குத்தான்வந்து
ருச்சுவுருமாலைகட்டிக் கொடுவாளுங்கையேந்தி
கச்சைசவரிந்துகட்டி கட்டாரிகைபிடித்து
அம்புவில்லுங்கையேந்தி ஆயுதங்கள்தான்தரித்து
பொம்மியம்மாள்காவலுக்கு போய்வாரேன்மாதிகனான்
அல்லுமபகலும் அறுபதுநாழிகையும்
காகமணுகாமல் கருங்குருவிநாடாமல்
பட்சிபறவாமல் பகல்மோசமவாராமல்
இப்படியாக இவாகாக்கும்நாளையிலே
வருணபகவானும் வந்துகவிந்ததினால்
ஈரேழுலகமெங்கும் இருள்வந்துசூழ்ந்ததினால்
வயதுசென்றமாதிகனும் மனதுநொந்துமெய்நடுங்கி
பொம்மியம்மாள்காவலுக்குப் போகக்கூடாமையினால்
மனதிலேயெண்ணி மகனுடனேசொல்லலுற்றான்
வீரப்பன்தான்கேட்டு வெகுவாய்மனங்குளிர்ந்து
இந்தஇருட்டிலேதான் எப்படிநீர்போவீரையா
பிள்ளையென்றுநானிருக்க பெரியவர்நீபோகலாமோ
மங்கையுடகாவலுக்குள் மகன்தானான்போய்வாரேன்
என்றுசொல்லித்தானும் எழுந்திருந்தான்வீரையனும்
எழுந்திருந்துதான்போய் எண்ணமற்றகாளையவன்
சலவைக்கல்மண்டபத்தில் சாமிபோல்நின்றுகொண்டு
சம்பங்கியெண்ணையால் தலைமுழுகிமயிராற்றி
கோதிமயிரைக் கோணாமல்சிக்கறுத்து
செங்கமலக்கையாலே சீக்கிரமாய்த்தாமுடித்து

சிவசிவாவென்று திருநீறணிந்துகொண்டு
சந்தனங்கஸ்தூரி தானணிந்தான்மார்புதனில்
பஞ்சவர்ணப்பட்டாடை பாங்காயலங்கரித்து
சிவந்தஉருமாலை செண்டுகட்டும்பாவனையாய்
மணடிபிடுங்கால்களுக்கு மாதளமபூச்சல்லடமாம்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
முன்னிறைதொங்கலிலே மோககன்னி அட்சரமாம்
பின்னின்றதொங்கலிலேபிர்மாவின் அட்சரமாம
உள்ளேகபாயணிந்து உடம்பெல்லாம் அங்கிபூண்டு
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
பாஜிபந்துதாயிதையும பாங்காகக்கையில்கட்டி
ஆபரணமெல்லாம் அலங்கரித்துதானுமிப்போ
எட்டிஅலாங்கத்தி யித்துடனேகேடயமும்
உடைவில்லுங்கைபிடித்து உடைவாளுந்தான் தரித்
து-பாக்குடனேவெற்றிலையும் பாங்காகத்தான் வாங்கி
மாதிகச்சின்னானைவந்துகண்டேயன்னேரம
பொம்மியம்மாள்காவலுக்கு போகவிடைதாருமையா
அப்படியேபோய்நீ அனுதினமுங்காவல்செய்வாய
என்றுசொல்லக்கேட்டு ஏத்தமுள்ளதென்மதுரை
நடந்தான் தான்வீரையனும நாலுதிக்குந்தானதிர
சிங்காரத்தோப்பை சீக்கிரமாய்த்தான்பார்க்க
அலங்காரத்தோப்பில் அச்சமற்றுதான் சேர்ந்தான்
பைங்கிளியாள் தன்குடிசைபக்கமேபோய்ச்சேர்ந்தான்
அந்நேரவேளையிலே ஆரணங்குபொம்மியம்மாள்

குடிசைவிட்டுவெளியில்வந்துகொப்பெனவேதான்பார்
த்தார் - தென்மதுரைநிற்கிறதை தேன்மொழியுங்கண்
டாளே-நிற்கிறதைக்கண்டு நெடுநேரமெய்மறந்து
ஆரோதெரியாது அர்த்தராத்திரிவேளைதனில்
மாதிகநல்லவிவன் மாற்றானாய்க்காணுதென்று
ஆரடாநிற்கிறவன் அஞ்சாமற்சொல்லிடுவாய
ஆரோவெனச்சொல்லி அஞ்சாதேமங்கையே நீ
மாதிகச்சின்னான்பெற்ற மைந்தன் நானென்றான்
நல்லதென்றுசொல்லி நடந்தாள்குடிசைக்குள்
பைங்கிளியாள்போய் படலெடுத்துசாத்தியபின்
கட்டிலின்மீதிருந்து கட்டளைகள்சொல்லுகிறாள்
பத்திரமாய்நீயும் படுத்திரடாவென்றுசொன்னாள்

மதுரைவீரன்பொம்மியம்மாளைச்சேருதல்.

மதுரைவீரன்தான்கேட்டுவகையுடனேபேசலுற்றான்
போட்டதொருகட்டிலில் போய்படுத்தாய்பெண்ணே
ஒண்டியொருவனுமா யுட்கார்ந்திருப்பேனோ
மங்கையரேநானும் மழையில்நனைகிறது
ஆண்பாவம்பொல்லாது அகட்டினால்தோஷமடி
இருட்டிலொருவனுமா யிருப்பேனோபெண்ணரசே
குடிசைக்குள்வரவழைத்தால் கோடிதர்மமுண்டாகுந்
இவ்வார்த்தைகேட்டிருந்த எந்திழையாள்சொல்லுகிறா

ள்-சக்கிலிப்பையனுக்குத் தலைபுழுகு ஆடுகுதோ
ஏகத்தாளம்பேசி எடுத்துரைக்கவந்தாயோடீ
காவல்செயயவந்தாயோ கற்பழிக்கவந்தாயோ
என்னபினத்துகிறாய் எழுந்திருந்துபோடாநீ
கூவென்றால்கேட்டு கோலபடைவந்துவிடும்
உந்தனையுமவெட்டிஉயர்க்கழுவில்போட்டிடுவார்
பையலென்றபோதே பதைக்குதடியென்மனது
தலைவெட்டிபோனாலுஞ் சக்கிலிநான்விடுவதில்லை
உந்தனையும்விட்டேன் னுயிர்தானும்போகாது
ஈரத்தில்நின்றால் என்னுடம்புக்காகாது
என்னுடன் நீயும் இசைவாகத்தான்கூடி
குடிசைக்குளேயழைத்துக் கூடினாலுந்தனுக்கு
கோடிதருமமுண்டு கோதையேகம்படிநீ
சக்கிலியனானாலுந் தனஞ்சயனானவண்டி
கன்னியரேகொஞ்சநாளில் காட்டுகிறேன்சவுரியத்தை
நேத்தேரவேளைதனி லிருவருமேகைகலந்து
பருவியிருவருமாய் மங்கையரேபெண்மயிலே
காமவிகாரங் களையாய்வருகுதடி
மன்மதபாணம மார்பில்வந்துதைக்குதடி
பஞ்சணைமெத்தையின்மேல் பக்கத்திடங்கொடுத்தால்
இருவருமாய்க்கூடி யிருப்பமடிபெண்ணரசே
கூடியிருந்தோமானால் கோதையரேநீநானும்
சந்தனங்கஸ்தூரிதான்பூசிவாழ்ந்திருப்பாய்
பால்பழமுஞ்சக்கரையும் பசியாமலுண்டிருப்பாய்

வெற்றிலையும்பாக்கும் விதவிதமாய்த்தானுகர்வாய்
எதேதுகேட்டாலும்எடுத்துவந்துதான்றருவேன
மங்கையேநான்கேட்கிறது மனதுமுருகலையோ
கலலுங்கரையுமடி கடலுமுருகுமடி
உன்வடிவுக்கேற்த உத்தமனுநான்தாண்டி
எதுக்குமஞ்சாதே இளமயிலேபெண்ணணங்கே
இப்படியாக இன்பமுடன்கேட்கையிலே
பேடைமயில்போல பெண்ணணங்குகேட்டிருந்து
ஈஸ்வரனேயெந்தலையில் யென்னயெழுதிவிட்டாய்
கன்னிகழியாமல் கல்யாணஞ்செய்யாமல்
சக்கிலியன்கற்பழிக்கத் தலையிலெழுதினையோ
என்றுசொல்லிகன்னியரு மேங்கிமுகம்வாடி
முத்துப்போல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டு
அழுதுமுகம்வாடி அவளிருக்கும்வேளையினில்
மண்டியிட்டுதானுழைந்து மடியின்மேலுட்கார்ந்து
மங்கையர்தானுமார்போடேதானணைந்தான்
ஏந்திழையேயுந்தனுக்கு என்னவிசாரமடி
ஆரென்றிருக்கிறாய் அருங்கிளியேபெண்மயிலே
காசிராசன்பெற்ற கருத்துள்ளவீரனடி
மகிமைதெரியாமல் மயங்குகிறாய்பெண்மயிலே
என்றுசொல்லித்தானும் எடுத்தவளைக்கண்துடைக்க
மங்கையரும்பார்த்து மனமுங்குளிர்ந்தாளாம்
தெளிந்துமுகமலர்ந்து தேன்மொழியாளப்போது
கண்குளிரப்பார்த்துக் கன்னிகையுமேதுசொல்வாள்

முன்னழகும்பின்னழகும் மூவுலகிற்கிட்டாத
மார்பழகைக்கண்டால் மயங்குவார்கோடிபெண்கள்
உருமால்கட்டழகும் உருத்திராட்சந்தன்னழகும்
சந்தனங்கள்தாரிதானணிந்தானமங்கையற்கு
புனுகுசவ்வாதுபொங்கமுடன்பூசலுற்றான்
மல்லிகைப்பூசண்பகப்பூவரிசையாயத்தான்தரித்தான்
உத்தரியந்தானணிந்து உச்சியிலேதான்தரித்தான்
மங்கையருமப்போதுமணமகிழ்ந்துகட்டிலின்மேல்
என்னைவலதழிக்க எத்தனைநாள்காத்திருந்தாய்
மகாதேவாநுனிறுல்மண்பிடித்தவேளையிலே
மன்னவனேயுந்தனுக்கு வளர்ந்திரோபூமிதனில்
என்றுசொல்லித்தானகைத்து ஏற்கையுள்ளகன்னிகை
யும்-அடைக்காயும்வெற்றிலையும் அன்பாகமுன்புவைத்
தாகல்-பாக்கிலையுந்தானருந்தி பரிந்துவிளையாடி
காமவிகாரங் கண்ணைமறந்ததப்போ
மன்மதபாணம் மார்புருவிப்போகையிலே
சோகையணிந்த துகிலாடைதானகன்று
மங்கையவைத்தானணைந்தான் மாணிக்கக்கையாலே
கட்டியணைத்தான் கனிவாயைமுத்தமிட்டான
மூகத்தோடுமுகம்வைத்து முத்தமிட்டாரிருவருமாய்
கந்தனுடன்வள்ளியம்மை கைகலந்தபாவனைபோல்
பார்வதியாள்தன்னுடனே பரமசிவன்சேர்ந்தப்போல்
கூடிமகிழ்ந்து குலாவிவிளையாடி
மதுரைமகாவீரன் மங்கையுடனதான்சேர்ந்தான்

இப்படியாக இருந்துவிளையாடியபின்
கட்டில்விட்டுத்தானிறங்கி கன்னியுமப்போது
புருஷனைதெய்வமென்றுபொற்கொடியுந்தானினைத்து
தென்மதுரைவீரனுக்கு தெண்டனிட்டுநிற்கையிலே
மன்னவனுமப்போது மங்கையைத்தானெடுத்து
காலில்விழுந்த காரணத்தைக்கேட்கலுற்றார்
பெண்ணரசிவாய்திறந்து பிரியமுடன்சொல்லுகிறாள்
மானிடவர்தானோ மகாதேவர்கீர்தானோ
எவ்வுலகராஜாவோ ஈஸ்வரனார்தன்மகனோ
ஆர்பெற்றகண்மணியோ ஆண்டவனேசேதிசொல்லு
மாதிகன்வீட்டில்வந்த வகையதனைசொல்லுமென்றாள்
தாய்தகப்பன்பேருந்தனஞ்சயனேசொல்லுமென்றாள்
மதுரையானவந்தவகை மங்கையரேசொல்லுகிறேன
கைலாசநாதர் கடாட்சத்தின்தன்னாலே
காசிமகாராஜனுக்குக் கண்மணியாய்நான்பிறந்தேன்
மாலையுடன்பிறந்தேனென்றுவனத்திலேபோட்டுவிட்
டார்-வனத்திலிருந்தஎன்னை மாதகியெடுத்துவந்தாள்
சக்கிலியன்வீட்டில் வளர்ந்தனடிதையலரே
இந்தமட்டுந்தான்சேதி இனியொன்றுநானறியேன்
என்றுசொன்னசொற்கேட் டினிதாய்மனமகிழ்ந்தாள்
பொழுதுவிடியுதுகாண் போய்பிழையுமன்னவனே
நாளைப்பொழுதில் நாகரீகம்பேசுவீர்காண்
இப்படித்தானிருக்குமந்தவேளையிலே
கங்குல்விடிந்து கதிரோனும்வந்துதித்தான்

தேன்மொழிபுந்துடிசைவிட்டுசீக்கிரமாய்வெளியில்வ
ந்து-கிழக்குமுகமாயிருக்குங்கேணியிடம்போயி
காலைமுகஞ்சுத்திசெய்து கனிவாயுங்கொப்பளித்து
சிவசிவாவென்றே திருநீறுதானுமிட்டு
அரகராவென்றுசொல்லி ஐயனையுந்தான்தொழுது
சோலைதமயிலனையாள் குடிசைக்குள்தானுழைந்தாள்
மதுரைவீரன்தானும் மாதிகன்வீடேபோனான்
மாதிகனுமோடிவந்து மைந்தனைத்தான்தழுவி
இந்நேரமென்னசெய்தாய் எந்தனதுகண்மணியே
மழையில்நனைந்ததினால் மறந்துநான்தூங்கிவிட்டேன்
நல்லதென்றுகூட்டிப்போய் நலமுள்ளமாதிகனும்
மங்கையரோபெண்ணே மைந்தனுக்குஅன்னமிடு
மாதாமனமகிழ்ந்து வட்டில்விளக்கிவைத்து
சின்னசம்பாவரிசி சமைத்தசாதம்படைத்து
தயிரொடுத்துவார்த்து தயவாய்ப்புசியுமென்றாள்
வற்றல்வட்டகம் வகையுடனேயூறுகாய்
கூட்டியமுதுண்டான் குணமுள்ளவீரனுமே
உண்டுபசியாறி உத்தமனும்வீற்றிரொன்றான்
கங்குல்வருமுன்னே கதிரோனும்போய்மறைந்தான்
இன்றையகாவலுக்கும் நடந்தானேயப்போது

மதுரைவீரன்பொம்மியம்மாளுக்குத்தாலிதரித்தல்.

பொன்னாபரணமெல்லாம் பூட்டியலங்கரித்து
ஆயுதமெடுத்து அரிவாளுங்கைபிடித்து
பார்த்தபேர்மோகிக்கப் பஞ்சவர்ணப்பொட்டுமிட்டு

மங்கைக்குத்தான் தரிக்க மங்கிலியந்தனைக்கொண்டே
நாடிகுடிசைதனில் நடந்தான்விசையனும்
மங்கைக்குடிசைதனில் மன்னவனுமலர்ந்துநின்றான்
காரிழையாளப்போது கண்டுமனமகிழ்ந்தாள்
ஆனாலும்பெண்ணரசே அன்பாகச்சொல்லுகிறேன்
மங்கிலியங்கட்டுதற்கு மகிழ்ச்சியாய்வந்தேனடி
இந்தசொற்கேட்டு ஏந்திழையாளப்போது
கழுத்திலேமங்கிலியங் கண்டதேயுண்டானால்
அம்மான்மார்கூடி யடுத்ததிசந்தொடுப்பார்
என்தகப்பன்தானும இருதுண்டாய்வீசிடுவான்
இப்படியாக ஏந்திழையுஞ்சொல்லலுற்றாள்
ஏதுக்குமஞ்சாதே இளங்கொடியேபெண்மயிலே
ஆதிசிவன்பிர்ம்மா ஆயனுடன்பார்வதியும்
முப்பத்துமுக்கோடி தேவர்களுமுனைநிற்க
அரனார்திருமகனும் ஆனைமுகப்பிள்ளையரும்
எல்லோரும்பார்த்திருக்க இந்தசிறுதாலிதன்னை
மஞ்சள்சரட்டில் வண்மையாய்த்தான்கோர்த்து
சாணமெடுத்துவந்து சதுரகத்தான்மெழுகி
பிள்ளையாரைப்பிடித்துப் பொற்புடனேதானிருத்தி
அருகுபிடுங்கிவந்து அன்பாய்விநாயகர்க்கு
புஷ்பங்கள் தூவியல்லோ போற்றிமிகத்துதித்து
பாதத்தின்முன்பாகப் பாங்கானதாலிதன்னை
வைத்துஇருவோரும் வணங்கியேதெண்டனிட்டு
சாம்பிராணிதூபம் சதுரகத்தான்கொடுக்க

தேவர்களெல்லாம் சிறப்பாகப்பார்த்திருந்தார்
அந்தநல்லவேளையிலே ஆண்சிங்கவீரையனும
சரட்டுடனே தாலிதன்னை சாங்கமாய்த்தானெடுத்து
தேவர்களைநோக்கி தெண்டனிட்டுவீரையனும்
சிவசிவாவென்றுசொல்லித் திருமங்கிலியந்தன்னை
தோகைநல்லாள்தன்கழுத்தில் சூட்டினனப்போது
அந்நேரந்தேவர்களு மலங்காரமாகவேதான்
பூமாரிதானும பொழிந்தார்களக்கணமே
ஆணிமுத்துவீரையனும் ஆரணங்குபொம்மியரும்
திட்டமுடனெழுந்து திர்க்கமுடன்தேவர்களை
அடிபணிந்துதெண்டனிட்டு அடவுடனேநின்றார்கள்
ஆசீர்வாதஞ்செய்து யாவரும்வரமளித்து
பொன்னுலகவாசலிலே போய்புகுந்தார்தேவரெல்லாம்
ஆணிமுத்துவீரையனை ஆரிழையாள்தான்பார்த்து
ஆதிசிவன்சர்ந்தா அமர்க்கசபைதானறிய
மங்கிலியத்தைத்தரித்த மைத்துனரேவாருமென்று
கூடியிருவருமாய் கைகோர்த்துதாமிருந்து
சிரித்துவிளையாடி தேன்மொழியைத்தானணைத்தான்
அணைந்துவிளையாடி ஆவலெல்லாந்தீர்த்தார்கள்
தீராதஆசையெல்லாந் தீர்ந்துஇருவருமாய்
நாளைக்குஇக்குடிசை நலமாகத்தான்பிடுங்கி
வாருங்காண்மைத்துனரே வார்த்தையொன்றுகேளுமெ
ன்றாள்-முப்பதுநாளு முடிந்ததுகாண்காலையுடன்
மாளிகைக்குத்தானழைக்கவருவார்காண்என்தகப்பா

உன்னைவிட்டுநான்பிரிந்து உகந்துயிருப்பேனோ
இருவருமாய்க்கூடி இனிதாயவிளையாட
என்னமக்குதானமையும் எந்தலைசொல்லுமென்றாள்
நாளைக்கிழமைக்கு நானவருவேனென்றுசொன்னார்
நாளையபொழுதில் நலமாகக்காண்பீர்காண
அதின்பிறகுஎன்னையல்லோ யார்பார்க்கப்போகிறார்கள்
என்னைத்தவிர எவருனக்குமாகாதோ
தேசத்திலேவொருபெண் சிக்காதோதேசிகனே
மண்டலத்திலநாதனே மற்றொருபெண்கிட்டாதோ
என்குறிஞ்சிக்கோட்டைக்குள் இடயாகவந்திரென்றாள்
கோட்டைக்குடிக்காரர் சொந்தளத்துசேவகரும
மன்னவரேயுமக்கு வழிவிடத்தான்போறாரா
பத்துதலைவாசலுக்கும் பத்துலட்சங்கோடிமன்னர்
தொட்டியர்கள்காவல துடுக்காயிருக்குமங்கே
வந்தாலுமும்மை வலுவையுள்ளதொட்டியர்கள்
கள்ளனென்றுதான்பிடித்துக் கைகாலைவாங்கிடுவார்
உயிர்க்கழுவில்போட்டு உன்தலையைவெட்டிவைப்பார்
அந்தப்படிகாவல் எத்தமுள்ளதொட்டியர்கள்
பொல்லாதவண்டன போக்கிரிகாரனென்தகப்பன்
இப்படியெல்லா மிகழ்ச்சியாய்ச்சொன்னேனென்று
மன்னவனேநீதானும மனவருத்தங்கொள்ளாதே
நடக்கும்வழிவகைகள் நானறிந்துசொன்னேன்காண்
என்னைமறவாமல் ஈடேற்றவேணுமென்று
புண்ணியனேயுமமைவிட்டு பொருக்தேனைநாழி

என்றுசொல்லிபொம்மியரும் எங்கிருக்கம்வாடி
என்னையும்விட்டு இருப்பீரோபூமியிலே
மன்னவரோயும்மைவிட்டு மண்மேலிருக்கவென்று
கண்ணீரும்விட்டழுது கலங்கினாள்பொம்மியரும்
அதுகண்டுவீரையனுமழவேண்டாம்பெண்ணேஎன்று
கண்ணீர்களைத்துடைத்து காவலனுமேதுசொல்வான்
உன்னைநான்கொண்டு ஊர்வழியேபோவேனடி
இருவரும்போய்பிழைப்போம் எத்தருள்ளபெண்ணார
சே-தேறுதலைசொல்லி தென்னவனுந்தான்பணிந்தான்
அந்தநல்லவேளையிலே ஆணொருயாதிகனும்
மைந்தனைத்தான்பார்த்து மாதிகனுமப்போது
முப்பதுநாளுமுடிந்ததுஇப்போது
ஆகையினாலிப்போது ஆணொருபொம்மியற்கு
காதுக்கிசைந்தவொரு சனத்தமிதியடியும்
மைந்தனேயுன்கையால் வளமாகச்செய்வதற்கு
மிதியடிக்காணவொரு வேணரவைரத்தினங்கள்
தங்கத்தால்சரிகைகளுந் தனிவயிரமுத்துகளும்
பொம்மநாய்க்கன புதல்விக்குவேணுமென்று
மிதியடியையழைக்க விரைவாகவென்கையில்
தந்தார்காணரத்தினத்தைத் தயவாகநீயெடுத்து
வாருகள்போலே வகையாகத்தான்சமைத்து
இட்டமுடன்நீயுஞ் சீராகவையுமைந்தா
அந்தசொற்கேட்டு ஆணிமுத்தவீரையனும்
சந்தோஷங்கொண்டு தானெழுந்து அந்நேரம்

குட்டியாட்டுத்தோலை கொற்றவனுந்தானெடுத்து
அட்டைக்குவளமான அட்டையுந்தான்சேர்த்து
அதற்கேற்றமேல்வாரும் அடைவாகத்தானமைத்து
ஒருநாழிகைக்குள்ளே யுச்சிதமாய்மிதியடியும
கட்டியங்கேதானெடுத்துக் காரணனுமப்போது
தகப்பன்றனையழைத்து தான்கொடுத்தான்வீரயனும்
பார்த்துமனமகிழ்ந்து பாலகனைக்கொண்டாடி
மாதிகனுயவாங்கி மனமகிழ்ந்துவைத்திருந்தான்

பொம்மியம்மாளை வீட்டிற்கழைத்துக்கொள்ளல்.

முப்பதுநாளும் முடிந்ததுகாணப்போது
பொழுதுவிடிந்தபின்பு பொம்மணநாய்க்கனுமே
பொமமியமமாளுக்குப் பொருந்துசடங்குசெய்ய
கூட்டத்துடனே குடிசைக்குத்தான்வந்து
குடிசைபிடுங்கிக் கொளுத்திவிட்டபிற்பாடு
பொம்மியம்மாள்தன்னைப் பொங்கமுடன்நீராட்டி
கூறையுடுத்திக் கோலப்பணிபூட்டி
கொப்பிட்டுவாளியிட்டுக் குந்தளப்பொன்னோலையிட்டு
கருங்குருவிவாலதுபோற் கண்ணிற்குமையெழுதி
நெற்றியிற்றிலதமதை நேராகத்தானுமிட்டு
உட்கழுத்துத்தாலி யுயர்த்தியுள்ளகலலிழைத்து
கட்டுவற்கந்தன்னாலே கழுத்திற்சரமணிந்து
மோகனமாலை முத்தாபரணமின்ன
மார்பில்பதக்கம் வகையுடனே தானணிந்து

மதுரைவீரசுவாமிகதை,

கடகஞ்சரிபவளங் கைவளையல்தானணிந்து
பத்துவிரல்துலக்கும பசும்பொன்மூலகாலாழி
இடுப்பிலொட்டியாணைய இதவாகத்தான்பூட்டி
காலாழிபீலாழி கனத்தசிலம்பணிந்து
பாடகந்தண்டை பாதசரம்பூட்டி
வங்கிதவேச்சமான வயிரத்தாஸ்மார்பதக்கம்
பூணாரமெல்லாம் பூட்டியலங்கரித்தார்
அந்தநல்லவேளையிலே பாவைதொருமாதிகளும்
மிதியடியைத்தாமெடுத்து விரைவாகக்கொண்டுவந்தார்
அந்தத்தொருபொம்மணனும் அன்பாய்மிதியடியை
பொம்மியம்மாளுக்குப் புகழ்ச்சியாய்த்தானெகொடுத்தார்
மிதியடியைத்தான்பார்த்து வேலனையகண்ணாளும்
மதுரைவேலையென்று மனங்குளிர்ந்தாரப்போது
தொட்டியத்துசக்கிலியர் துநசாகக்கொம்பூத
தப்பட்டைமேளம் தவில்முரசுதானமுழங்க
எருதுமேல்நகார மெட்டுதிசையதிர
புன்னாங்குழலூத பேரிகையடித்துவர
ந கசுரமேள காட்டியங்களாடிவர
பதினெட்டுமேளம் பாங்குடனேவாசித்து
வெடிசத்தமெங்கும் வேண்படியானதிர
கட்டியகர்ளெச்சரிக்கை கைகட்டிகூறிவர

வாராளாம்பொம்மியம்மாள் வர்ணமணிமாளிகைக்கு
ஆலாத்திசுற்றுமபெண்கள் அன்னம்போல்நடந்துவர
பொம்மியம்மாள்தனக்கு பொருந்துதிருஷ்டிகழிக்க

முத்தாலே ஆலாத்தி மூவாயிரங்கோடி
மாணிக்க ஆலாத்தி வகைவகையாய்த்தானெடுத்து
திருஷ்டிகழித்தார்கள் திக்கெல்லாம்விட்டோட
கட்டியங்கூறக் கவுரிப்பணிவீச
மங்கைநல்லாள்பொம்மியருமமாளிகையினுட்புகுந்தாள்
அந்நேரவேளையிலே யாணதொருபொம்மணனும
தையநல்லாளுக்குச் சடங்குசெய்யவேணுமென்று
வேதப்பிராமணரை விதியுடனேதானழைத்து
நல்லதினந்தானென்று நன்றாகப்பாருமென்றான்
சித்திரைமாசஞ் சிறந்தசிங்கலக்கினத்தில்
நல்லவேளையென்று நாலுபக்கங்கால்நாட்டி
சநதுணக்கையால் சதிராமுகக்கால்நாட்டி
பத்தரைமாற்றுப் பசும்பொன்விரைபரப்பி
செணபகப்பூவரும்பால் சிறக்கவேமாலைகட்டி
மெல்லிநல்லாள்தானிருக்க மேல்கட்டுத்தொங்கலிட்டு
பச்சைக்கிளியும் பசும்பொன்கலசமிட்டு
தூணுக்குத்தூணு தூங்காவிளக்கெரிய
குத்துவிளக்கெரிய குடவிளக்குமின்னெறிய
தப்பட்டைமேளம் தவில்முரசுதான்முழங்க
எக்காளமூத எங்குங்கிடுகிடென்ன
பாளயப்பட்டிலுள்ள பரிசனங்களத்தனையும்
துரைகள்துரைமக்கள் துரைராசமன்னவரும்
மங்கிலியப்பெண்கள் மங்கையர்கள்கூட்டமுடன்

வந்தவுறன்முறைக்கு வரிசையாய்பொம்மணனும்
மாணிக்கமணவரையில் மங்கைதனை கூட்டிவந்து
வக்சிரத்தால்முக்காலி வரிசையாய்த்தான்போட்டு
பொம்மியைக்கொண்டுவந்து பொங்கமுடனிருத்தி
சாஸ்திரஞ்சொன்னபடி சதிராகத்தான்முடித்து
அணனையாமபொம்மிதனையரண்மனைக்குக்கொண்டுவந்து
வந்தவுறன்முறைக்கு வரிசையாய்பொமமணனும்
சந்தனங்கஸ்தூரி காண்பூசியெல்லோர்க்கும்
பரிவுடனே தானும் பாக்கிலையுந்தான்கொடுத்தான்

விருந்திடல்.

விருந்தங்களித்தார்கள் வுச்சிதமாய்தொட்டியற்கு
ஆயிரங்கலசம்பாவரிசி அடைவுடனே தான்வடித்து
பதின்கலப்பருப்பு பாங்குடனே தான்சமைத்து
வாழைக்காய்பொரியல்வழுதலங்காய்ப்புளிச்சமையல்
பச்சடியில்நூறுவகை பாற்குழம்புந்தானசமைத்து
மோர்குழமபுஆமைவடை முருங்கைப்பூகூட்டமுது
கீரையிலபத்துவிதம் கிரமமாய்த்தான்சமைத்து
பலவகைபதார்த்தங்கள் பண்பாகத்தான்சமைத்து
அதிரசம்பேணி அதிசயமாகச்சமைத்து
போளிசுகியன் பொங்கமுடன்செய்து
லட்டுசிலேபி லட்சணமாகச்செய்து
காராசேவுபூந்தி கணத்தகற்கண்டுடனே
சர்க்கரையினலபதுமை சங்கமுடன்தான்செய்து
வடையப்பளமும் வகைவகையாய்த்தான்செய்து

இட்டிலிதோசை யிளிப்புள்ளகாரமுடன்
அனபாகந்தான்செய்து அளவிலபலகாரமுடன்
வாழைப்பலாக்கனியும வண்மையுள்ளமாங்கனியும்
தேனுடனேசர்க்கரையும தெவிட்டவேதான்போட்டு
புத்துருக்குநெய்யும பொங்கமுடனதான்வார்த்து
பால்விட்டபாயசமும பத்துவிதந்தான்செய்து
இத்துடனேகூட எற்றகறிவகைகள்
வேணபடிசெய்து விதமவிதமாய்த்தான்சமைத்து
பந்திபறிமாறி பாங்காய்விசாரித்து
உறன்முறையோரெல்லாரும் உண்டுபசியாறி
கைகாலலம்பிக் கனிவாயைக்கொப்பளித்து
வந்துவுட்கார்ந்தார்கள் வண்மையுள்ளபந்தலிலே
சந்தனமும்புட்பமுந் தயவாயலங்கரித்து
அடைக்காயும்வெற்றிலேயும அன்பாகவேயளித்தார்
வால்மிளகுஏலக்காய் வண்மையுள்ளசாதிக்காய்
ஜாபத்திரிகிராம்புடனே சம்பிரமாய்த்தான்கொடுத்து
அருகிலிருந்து அனைவரையும்பூசித்தார்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
மாதிகச்சின்னானும வண்மையுள்ளவீரனுமே
சாதங்கரிவாங்கத் தாமவாராரந்நேரம
பொம்மணநாய்க்கரும் பெருமையுடனேபார்த்து
ஆடிதாதிகளே அன்னமபடையுமென்றார்
படையுமென்றசத்தம் பைங்கிளியாளகேட்டு
ஆரென்றுசொல்லி அலறியெழுந்திருந்தாள்

தாதியுமப்போது சக்கிலியனென்றுசொன்னாள்
சாதங்கறியுடனே தட்டில்பரிமாற
கொண்டுவாவென்று கூறலுற்றாளப்போது
தாதியருமுன்னடக்க தையலருங்கூடவந்து
மாதிகர்க்குப்பெண்ணரசி வாரியமுதிட்டாள்
மதுரைநல்லவீரையனை மங்கையருந்தான்பார்த்தாள்
தகப்பனுடன்கூட தன்மனைக்குப்போய்ச்சேர்ந்து
நடுராத்திரியில்வீரனுமே நல்லணங்கைத்தானினைத்து
மைந்தனென்றுதான்வளர்த்தமாதிகற்குங்கூறாமல்
பதினைந்துநாழிகையில் பள்ளியரையைவிட்டு
சர்வாபரணமெல்லாந் தானணிந்தானப்போது
மாளிகையைவிட்டு வாறான்காவலுடன்
பொம்மியர்மேலாசைகொண்டுபுறப்பட்டான்வீரனுமே
கொள்ளைகொண்டவீரனுமே கோட்டைக்குமுன்வந்து
அனுமந்தலகுவெடுத்து அதிரகுதித்தான்காண்
பத்துகட்டுவாசலையும் பாங்காகத்தான்கடந்தான்
பொமமியர்க்குக்காவலாய் பொம்மணனுமப்போது
தலைவாசல்முன்னே சப்ரமஞ்சக்கட்டிலின்மேல்
உருவினகத்தியுட னுறங்கினான்பொம்மணனும்
இத்தனைகட்டுதிட்டமயிருந்துநம்மையென்னசெய்வார்
என்றுசொல்லிதான்சிரித்து ஏற்றமுள்ளவீரையனும்
ஈயைப்போல்வடிவெடுத்துஇறப்பிலேபோய்நுழைந்து
மெள்ளநுழைந்துபோய் மெல்லியரைத்தானெடுத்து

தேன்மொழியாள்பொம்மி திடுக்கென்றெழுந்திருந்து
கணவனைக்கண்டவுடன் கன்னியருப்பூரித்தாள்
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
இருவருந்தான் தழுவி யிருந்தார்கள்பஞ்சணைமேல்
தென்மதுரைவீரனைத் தேன்மொழியுந்தான்பார்த்
து-அங்கங்கேகாவல் ஆனதொருசேவகரும
தொட்டியர்கள்காவல தடுக்காதக்காவலங்கே
மாளிகைவாசலிலே மன்னனுமென்தகப்பன்
உருவினகத்தியுடன் உன்மாமன்தானிருக்க
கோட்டைதலைவாசல் கொத்தளமுந்தான்கடந்து
இந்தப்படிகாவலிலே எப்படிநீர்வந்தீரென்றாள்
கேளடிபெண்மயிலே கிரீடிக்கிறதற்காக
ஏந்திழையேயுன்னைவிட்டுஇருக்கேனொருநாழி
அரண்மனையில்நீயிருந்து அவ்விடத்தில்நானிருந்தால்
ஏகாந்தமெங்கேயடி இருவருக்கும்பெண்ணரசே
ஆகையினாலே ஆரணங்கேயுனைநினைத்து
கட்டுடனகாவல கடந்துவந்தேனென்னசமர்த்தால்

மதுரைவீரனும் பொம்மியம்மாளும்
திருச்சிறாப்பள்ளிக்குப் புறப்படல்.

வாருமடிபெண்ணேவையகத்திற்போய்ப்பிழைப்போம்
தெற்கேயொருகோட்டை திருச்சிறாபள்ளியென்ன
இருக்குதடிபெணமயிலே இருவருமேபோவமென்றார்
நல்லதென்றுசொல்லி நலமுள்ளமங்கையரும்
மாணிக்கப்பெட்டியை வகையுடனேதான்திறந்து

செலவுக்கோறாயிரம்பொன் சீக்கிரமாய்த்தானெடுத்து
பட்டுபட்டாவளிகள் பாங்குடனே தானெடுத்து
ஒற்றைக்கால்கூடாரம ஒங்கவேதானெடுத்து
அத்தனையுந்தானெடுத்து ஆரணங்குமன்னவனும்
போகவேணுமென்றுசொல்லிப் புறப்பட்டாரிருவருமா
ய்-கதவைத்திறந்தவுடன் கன்னிகையுங்காளையரும்
மாளிகையைவிட்டுத்தலைவாசலிலேவந்துபின்று
திறந்தக்கதவை சேரவேதான்மூடி
காளிகளையழைத்து காவலிருக்கச்செய்து
தாப்பாளுமபூட்டுந் தப்பாமல்பூட்டிவிடு
என்றுசொல்லிவீரையனும் இதமாகநீரெடுத்து
மந்திரித்துப்போட்டு மன்னவனுமப்போது
பொம்மணனேனும் புரவிதனையவிழ்த்து
தகைக்கடிவாளந் தாராளமாய்ப்பூட்டி
பத்தரைமாற்றுப் பசும்பொன்ஜல்சீனிகட்டி
கூடாரத்தைமடித்து குதிரையின்மேல்போட்டு
பட்டாபெரியகத்தி பாங்குடனே தானெத்து
பொன்புரவிமேலே பொம்மியரைத்தூக்கிவைத்து
கடிவாளங்கைபிடித்துக் காரணவுமேறலுற்றான்
கோட்டை கடந்தார்கள்கொள்ளைகொண்டவீரையனும்
கொல்லிமலைகடந்து கோனேரியாறுவிட்டு
ஆமூர்வழியாக ஆற்றில்வந்துதானிறங்கி
காட்டினான்கூடாரம் கட்டாற்றில்வீரையனும்
பலகாரஞ்சாப்பிட்டு பள்ளிகொண்டாரிருவருமாய்

ஏகாந்தம்பேசி இருக்குமந்தவேளையிலே
பொழுதுவிடிந்தது பொம்மணனுமப்போது
பட்டத்துபுரவியையும் பட்டத்துக்கத்தியையும்
காணாததினாலே கலக்கமுற்று அந்நேரம்
பொம்மியம்மாளைப் புகழ்ச்சியாய்க்கூப்பிட்டு
பேசவில்லைஎன்றுசொல்லி பேர்த்தெரிந்தார்க்கதவை
பார்த்துமகளில்லையென்று பதறிவிழுந்தான்காண்
பொம்மியரைக்காணமென்று புலம்பிவெளியில்வந்து
வேதியர்கள்சொன்னதெல்லாம்மெய்யாச்சுஎன்றுசொல்
லி-பட்டணத்திலுள்ள பரிசனங்களத்தனையும
திக்குதிசைகளெல்லாந் தேடித்திரிகையிலே
மாதிகச்சி அணுனும் மகளையுங்காணோமென்று
எதிர்கவந்தான்காண் எண்ணமற்றசக்கிலியன்
எல்லோரும்பார்க்க எடுத்துரைத்தானந்நேரம்
மாதிகன்மகனுமிப்போ மங்கையரைக்கொண்டுசென்றா
ன்-என்றுசொல்லிநாய்க்கருக்கெடுத்துரைத்தாரந்நேர

மதுரைவீரன்மேல்பொம்மணன்படையெடுத்தல் (ம்

சேனைகளைக்கூட்டி திரளாகப்போவதற்குப்
பதினாயிரம்வெடிக்காரர் பாங்குடனேகூட்டமிட்டார்
வளைதடிசக்கரங்கள் வகையுள்ளராணுவங்கள்
சேனைகளையெல்லாந் திரளாகத்தான்கூட்டி
அந்தநல்லவேளையிலே ஆனதொருபொம்மணனும்
வாருவலயமும் வளைதடிசக்கரமும்

எறியம்புநெரியம்பு யீட்டியுங்கைபிடித்து
வேணவிருதுகளும் விதவிதமாய்த்தானெடுத்து
பஞ்சகல்யாணப்புரவி பாங்காகக்கொண்டுவந்தார்
பொம்மணநாயக்கன் புரவிதனிலேறி
தலைபாரிமுன்போகத் தனிப்பறியும்பின்தொடர்ந்து
சேனைவருவதினால் செந்தூள்பறக்குதங்கே
தப்பட்டைகொம்பு தவின்முரசுமுழங்கிவர
யானையின்மேல்பேரிகை யதிர்ந்துமுழங்கிவர
வழியிலெதிராக வருவோரைக்கேட்கலுற்றார்
ஒற்றைக்குதிரை ஒருபெண்ணுமாண்பிள்ளை
கண்டாயோவிவ்வழியில் கண்மணியேதம்பியரே
அப்போதாட்டிடையன் அவன்கண்டசேதிதன்னை
வாருமையாசுவாமி வந்தவகைசொல்லுகிறேன்
கருங்கால்வழியாய்க் கண்டேனொருகுதிரை
குதிரையின்மேலேயொரு கோதையருமன்னவனும்
இவர்களிரண்டுபேரும் இதமாகப்போறார்கள
அந்தநல்லசேதிகளை அடைவாகத்தான்கேட்டு
பொம்மணனுமப்போது போகிறான்வேகமுடன்
கருந்தூளுஞ்செந்தூளுங்கலந்துபறக்குதப்போ
காவேரியாற்றில் கண்டானேகூடாரம்
அதிலிறங்கிச்சேனை அலைகொட்டிவருகிறதைக்
கூடாரத்திலிருந்த கோதையருப்வெளியிலவந்து
வடக்குமுகம்பார்த்தாள் வருகின்றசேனைகளை

அலரியேபோய்விழுந்தாள் ஆணிமுத்துவீரன்மேல்
என்னடிபெண்ணேயென்று எழுந்துவெளியில்வந்து
பார்த்தான்வடக்குமுகம் பரந்துவருஞ்சேனைதனை
கண்டுமந்தவீரையனுங் கன்னிமனந்தேற்ற
கூடாரத்தின்மேலே கொள்ளைகொள்ளையென்றுசொல்
லி-வந்துநிறைந்தார்கள் வந்தசேனையத்தனையும்
பதினாயிரம்பேர்கள் பாங்குடனே அம்புதொட்டு
கூவியதுபோல கொடியம்புதான்தொட்டு
வெட்டவேணுமென்று வீரன்மேல்வாரார்கள்

(மதுரைவீரன் சண்டைக்குப்போகுதல்.)

கண்டுமந்தவீரையனுங் கடுங்கோபந்தானாகி
மீசைதுடிக்குதப்போவெகுகோபங்கொள்ளுதப்போ
ஏறினார்குதிரையின்மேல் எடுத்தார்பெரியகத்தி
மன்னவனையுங்கள் மாமனாருந்தனையும்
வெட்டாமல்விட்டுவர வேணுமென்றுதெண்டனிட்டா
ன்-பைங்கிளியேபெண்மயிலே படுகளத்திலொப்பாரி
உண்டோயித்தேசத்தில் உண்மையைச்சொல்லவந்தாய்
என்றுசொல்லிவீரனுந்தான் எதிராளிசேனையிலே
யானைத்திரளதனில் ஆளிவந்துபாய்ந்ததுபோல்
சேனைதளத்தில் சிறுவேங்கைபாய்ந்ததுபோல்
வந்துவளைந்தாலும் மட்டற்றசேனைதனில்

சேனைகளெல்லாந் திரளாகவோடியங்கே
மாண்டுமடிகிறது மன்னனதுசேனையெல்லாம்
மூன்வீச்சுக்காயிரம்பேர் மூனைவீச்சுக்காயிரமபேர்
இறந்துமடியுதப்போ எண்ணிறந்தசேனையெல்லாம்
பொம்மியால்நம்முயிர்தான் போகுதெனறுசொல்வார்க
ள்-என்றுபுலம்பி யிறந்துமடியுதப்போ
புஷ்பமாய்வந்து பொழியுதுகாணுண்டவன்மேல்
தொடர்ந்துபோய்வீரன் துடுக்கப்படையையெல்லாம்
துண்டுதுண்டமாகத் துணித்தானுமப்போது
சாகிபசலாமென்று தான்விழுந்தார்கள்கோடிபடை
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனதுராணுகளும்
கோட்டைக்கதவடைத்து கொத்தளத்தின்மேலிருந்து
வேடிக்கைபார்க்கிறார்கள் வேந்தன்படைத்தளமும
சேனைத்தளங்களெல்லாஞ் சேதமாய்ப்போச்சுதென்று
மனதுகலங்கியப்போ மன்னவனுமேதுசொல்வான்
சக்கிலியன்தானுமிப்போ தலையறுத்தான்சேனைகளை
கூட்டப்படைகளெல்லாங் கொன்றுகருவறுத்தான்
நாம்போய்விழுந்து நறுக்குவோம்சங்கிலியை
என்றுநினைத்து எற்றமன்னன்பொம்மணனும்
புரவிதனிலேறிப் புறப்பட்டானப்போது
எதிர்கொண்டுவந்த எண்ணமுற்றமாயனைத்தான்
பார்த்துமங்கேபற்கடித்துப் பதறிப்போய்தான்விழுந்
து-மாமனென்றும்பாராமல் வாளாலேவீசிவிட்டான்
மாமன்விழுந்தபின்பு மதுரைமகாமுனியும்

தொட்டியப்பயல்களைத்தான் துரத்திக்கருவறுத்து
கத்திபரிசையெல்லாங் காவேரியிற்றுணலபி
கொள்ளைகொண்டவீரையனுங்கூடாரந்தானேக்க
குலுங்கநடைநடந்து குஞ்சிரிப்புகொண்டுவந்து
அடுத்தாரைக்காக்கும் ஆணிமுத்துவீரனுமே
வர்ணமணிகூடாரம வந்திருக்கும்வேளையிலே
ஏந்திழையமப்போது என்தகப்பனெங்கேயென்றாள்
உன்தகப்பன்தானும் ஒக்கமடிந்தாண்டி
என்றுசொல்லக்கேட்டு ஏற்றமுள்ளபொம்மியரும்
அலரியேபோய்விழுந்தாளானதொருபடுகளத்தில்
பொம்மணன்மேல்விழுந்து புலம்பியழுகலுற்றாள்
என்னாலேஉங்களுயிர் எமலோகஞ்சேர்ந்ததோ
பாவிமகளாலே படுகளத்தில்மடிந்தீரோ
என்னைவிட்டுநீங்கள் இருந்தரசுஆளாமல்
சேனைதளத்துடனே சீக்கிரமாயாற்றில்வந்து
மடிந்தீரோமன்னவனே மகாசேனையத்தனையும்
என்றுபுலம்பி ஏங்கியழுகலுற்றாள்
மங்கையரைத்தானெடுத்து மார்புடனேதானணைத்து
அழுகிறதைத்தானமர்த்தி அன்னேரம்வீரனுமே
திரிச்சிறுபள்ளியிற்போய் சீக்கிரமாய்கட்டைகொண்டு
சந்தனக்கட்டையின்மேல் சதுராயெடுத்துவந்து
நீர்க்கடனுந்தீர்க்கடனும் நீதியுள்ளமாமனுக்கு
வரிசையுடனேமுடித்து வனமயிலும்வீரனுந்தான்
காவேரிதீர்த்தத்தில் கனமாகத்தான்குளித்து

மங்கையருபவீரையனும் வந்தார்கள் கூடாரம்
சாதங்கறிவகைகள் சமைத்தாராம் அன்னேரம்
படைத்தசாதத்தை பரிவாகவீரனுண்டு
பைங்கிளியைப்பார்த்துப்பசியாறும்பெண்ணேயென்று
ன்-உண்டுபசியாறி உத்தமியாள்பொம்மியரும்
இருவருங்கூடி ஏகாந்தமாயிருந்து
பாக்கிலைதானருந்திப் பரிந்துவிளையாடி
என்னடிபொம்மியரேநாம்இங்கிருக்கக்காரணமேன்
கூடாரந்தான்பிடுங்கிக் கோட்டைக்குப்போவோமென்
று-பொம்மியரும்வீரனுந்தான்புரவிதனிலேறி
திருச்சிராப்பள்ளிக்குச் சீக்கிரமாய்ப்போகையிலே

மதுரைவீரன் விஜயரங்கனிடத்தில் சம்பளத்துக்குப் போயிருத்தல்.

கோட்டைதலைவாசல் குறிக்காரர்தாமறிந்து
எந்தவூரென்று இதமாகத்தான்கேட்டு
வடக்கேயிருந்து வருகிறோமென்றுசொல்லி
சேவகமில்லாமல் செம்மையாயிங்குவந்தோம
நல்லதென்றுசொல்லி நாய்க்கருக்கறிக்கையிட
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனதுகேட்டு
வந்தவொருசேவகனை வாசல்தடையில்லாமல்
கூட்டியிங்கேவாருமென்றுகொல்லனையனுப்பிவைத்தா
ர்-வீரனைக்கேட்டு விருப்பமுடனேநடந்தான்
பொம்மியம்மாளுக்கு தான்விடுதி பொங்கமுடனேயமர்
த்தி-வீதியில்விட்டு வெந்தவிடந்தானபோறார்

கண்டு துரைராஜாவுங் காரணனைத்தான்பார்த்து
வாங்களென்றுசொல்லி வரிசையுடனிருத்தி
எந்தவூரெங்குவந்தீர் வந்தகாரியஞ்சொல்லென்றார்
வடதிசையில்நானிருந்து வந்தேனையாஉங்களண்டை
ஆனதொருசேவகத்தை யடைவாகத்தந்தீரானால்
அரண்மனைவாசலிலே அசையாமற்காத்திருப்பேன்
என்றுசொல்லிவீரனுக்கு யேத்தமுள்ளராசாவும்
என்னகாண்சம்பளம் இயம்பென்றுதான்கேட்க
திங்களுக்கோராயிரம்பொன் திறமாகத்தரவேணும்
நல்லதென்றுசொல்லி நாய்க்கனுஞ்சம்மதித்து
ஆயிரஞ்சேவகற்கு அணித்தலைவனாகயிரு
உச்சிதமான உடுப்புகள்தான்கொடுத்து
இந்தப்படிவீரன் இருக்குமவ்வேளையிலே
யானையின்மேலேறி அலங்கஞ்சுற்றிவருகிறதும்
குதிரையின்மேலேறி கோட்டை—சுற்றிவருகிறதும்
ஆருமறியாமல் அரண்மனைக்குப்போகுறதும்
வேடங்கள்பூண்டு வீதிசுற்றிவருகிறதும
பதிவிரதைப்பெண் பதியைக்குலைக்கிறதும்
ஸ்ரீரங்கநாயகனைச் சேவித்துவருகிறதும
வேட்டைகளாடி விடுதிவந்துசேர்கிறதும
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
விசையரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராஜன்மெச்சுந்
தேசக்குறிக்காரன் கிருஷ்ணப்பநாய்க்கருந்தான்
பிள்ளைகளில்லையென்று பெருந்தவசுதானிருக்க

மாயனருளாலே வந்துதித்தாள்மங்கையரும்
புத்திரிபிறந்தவுடன் பூரித்துத்தானிருந்து
வேறாரண்மனையை விசித்திரமாய்க்கட்டிவைத்து
மங்கையந்த அரண்மனையில் மகிழ்ச்சியாய்த்தானிருந்தா
ள்- அரண்மனைக்குமுன்பாக ஆனிமுத்துவீரனுந்தான்
வருகிறபோது மருந்துபொடிவாசனையும
விசுவசத்தைக்கண்டு வேலனையகண்ணாளும
ஆரென்றுசொல்லி அவளெட்டித்தான்பார்த்தாள்
கன்னியிளமயிலைக் கண்டவுடனே வீரனுமே
ஆகட்டுமென்றுசொல்லி அதட்டியேதானடந்தான்
கண்டாளே வீரன்தனைக் களிப்புடனே சொக்கியவள்
மோகித்துப்பெண்மயிலாள் முத்தையன்மேலிச்சைகொ
ண்டு- அன்னம்விரும்பாமல் ஆடைக்காயருந்தாமல்
எண்ணங்கொண்டேமிகவும் ஏங்கியவளிருக்க
பொம்மியருமப்போது போசனங்கள்தான்படைக்க
சாப்பிட்டிளைப்பாறி தனிச்சிங்கவீரனுமே
நஞ்சுதின்றநஞ்சறக்கும நடுச்சாமவேளையிலே
பகற்காலந்தான்பார்த்த பாவையளைத்தானினைந்து
படுக்கையைவிட்டெழுந்து பாவையரண்மனையில்
ஆசாரவாசல் அரண்மனைவாசல்கடந்து
ஏறிமதில்கடந்து யேகுநிழைவிட்டேறிவந்து
ஏறாசுவீரனுந்தான் இசைவாகநிற்கையிலே
நாய்க்கர்மகள்தானும் நல்நித்திரைசெய்கையிலே
மதுரைவீரனணிந்த வாடையவள்மேல்வீச

பள்ளிகொண்டுதானிருக்கும்பைங்கிளியாள்தான்பார்த்
து-இந்தப்பொடிவாசனையேதுகாணென்றுசொல்லி
காலையில்கண்ட காரணனும்வந்தானே
யாமென்றுசொல்லி யறிந்துவரவேணுமென்று
பஞ்சணைமெத்தைவிட்டு பைங்கிளியாள்தானெழுந்து
மாணிக்கப்பொற்கதவை மங்கையருமபோயதிறந்து
பார்க்குமளவில் ஆணிமுத்துவிரனிற்க
கண்டுமனமகிழ்ந்து கன்னிகையுமப்போது
மணவாளனிற்கிறதை மங்கையவள்தான்பார்த்து
மயங்கியேதானவிழுந்தாள் மங்கையவளப்போது
மாணிக்கக்கையாலே மங்கையனைத்தானெடுத்து
கற்பூரமையெடுத்துக் கன்னியர்க்குத்தானுமிட
சோகந்தெளிந்து தோகையருங்கூறலுற்றாள்
வாருங்காணராசாவே வார்த்தைசொல்லக்கேளுமினி
என்றுசொல்லத்தானு மேந்திழையாளருகில்வந்தான்
கட்டியணைத்தார் கனிவாயைமுத்தமிட்டாள்
அடைக்காயும்வெற்றிலையும் அன்புடனேதாமருந்தி
சிரித்துவிளையாடி தேனமொழியைத்தான்சேர்ந்து
இரதலீலையெல்லாம் தீர்ந்துதெளிந்தபின்பு
மங்கையருமப்போது மகிழ்ச்சியாயெழுந்திருந்து
விநாயகனுக்குத்தானும் வேண்டுமென்றபலகாரம்
அதிரசமும்தேன்குழலும் ஆனசுகிவடையும்
அவரிச்சரக்கு தேசத்துச்சாராயம் (தான்
அத்திலையுங்கொண்டுவந் தாண்டவர்க்குமுன்புவைத்

இத்தனைநேரம்இளப்புடனேநீரிருந்தீர்
பசியாறுமென்றுசொல்லிப்பைங்கிளியுந்தான்கூற
தென்மதுரைதானுஞ் சீக்கிரமாயத்தானபுசித்து
அடைக்காயும்வெற்றிலையும் அன்புடனேதாமருந்தி
வாருமடிபெண்ணரசே வார்த்தைசொல்லக்கேளுமினி
என்றுசொல்லிவீரையனுமேமொக்குழையைக்கேட்கலுற்றா
ர்-பெண்மயிலேநானும போகிறேனரண்மனைக்கு
என்றுசொல்லித்தானும எழுந்துநின்றாரப்போது
மன்னன்முகம்நோக்கி மங்கையருமப்போது
எப்போதுவருவீர்காணென்றுசொல்லிக்கேட்கலுற்றாள்
மாதமொருதினந்தான் மங்கையரேநான்வருவேன்
என்றுசொல்லிவீரையனும இதமாய்வெளியில்வந்து
சுத்தாலேயேறி துருசாய்க்குதித்திறங்கி
ஆணிமுத்துவீரையனும் அசைந்துநடைநடந்து
வருகிறான்பொம்மியிடம் மாணிக்கமாளிகைக்கு
வீரையனுந்தானும விடுதிவந்துசேர்ந்தானும
பொம்மியருங்கண்டு பொங்கியேகோபங்கொண்டு
இந்நேரமட்டும் எங்கேபோய்வந்தீர்காண்
முறையும்வரிசையில்லை மூர்க்கமுள்ளமன்னவனே
பெண்டுகளைக்கண்டால் பேய்போலபறக்கிறீர்காண்
பாதகரேகாணிதற்கோ பற்றிவந்தேனுன்பிறகே
என்றுசொல்லிபொம்மி யெடுத்தெறிந்துபேசியபின்
எங்கிமுகம்வாடியெண்ணியழுகலுற்றாள்
எண்ணிவெறிக்கார தனஞ்சயனுந்தானுமப்போ

இர்தசலிப்பெண்டி வேந்திமையேபொம்மியென்று
வாரியெடுத்து மார்போடேதானணைத்து
உன்னைவிட்டுநானு மொருவர்முகம்பார்த்ததில்லை
பைங்கிளியேயென்று பரவசமாய்சொல்லியபின்
மனமுமதெளிந்ததப்போமங்கையருந்தானெழுந்து
சாதங்கறிவகைகள் தயவாகத்தான்படைத்தாள
சாப்பிட்டிளைப்பாறி தக்கோலந்தானருந்தி
சிரித்துவிளையாடி சீராகத்தானிருந்தார்
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராசாவை
காணபித்துக்கொண்டுகாத்திருக்குமவேளையிலே
மன்னர்துரைராசனுக்கு மதுரையிலேதானிருந்து
வெள்ளித்தடிக்காரர் விறுணவுத்தரங்கள்
துருசாகத்தானெடுத்துத் தூதுவர்களப்போது
ஆசாரவாசல்வந்து அடைவுடனேகைதொழுது
உத்தரத்தைத் தான்கொடுத்தார் உத்தமரும வாங்கிப்
வந்தொருவுத்தாரத்தை வாசித்துபாருமென்றார்(போ
மதுரையருகாதம் வாழ்மதுரைமுக்காதம
வைகைநதியும் வற்றாதபொய்கைகளும
சொக்கரிடசன்னிதியும் சொர்ணமணிகோபுரமும்
மீனாட்சிசன்னிதியும வெண்முத்தால்கோபுரமும்
புஷ்பவனமும பொய்கைதாமரைக்குளமும்
இப்படியாயிருக்கும பெண்ணமற்றராச்சியத்தில்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுக்கள்ளரெல்லாம்
காட்டிலுள்ளகள்ளரெல்லாமநலமாகக்கூட்டமிட்டு

அழகர் தன்கோயிலுக்குயாரொருவர்போனாலும்
கண்டவிடமெல்லாங் கள்ளருபத்திரவத்தால்
உழவுகடவுமில்லை உபத்திரியந்தனாலே
கொலைவரிமுடிப்புக் கொடுக்கப்பயமாச்சு
இப்படியாகக்கள்ள ரிடக்குகள்செய்கிறார்கள்
என்றுசொல்லிநாய்க்கரெழுதிவிட்டாருத்திரத்தை
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனுந்தான்கேட்டு
சபையிலுள்ளபேரையெல்லாந் காருயமுகமாப்பார்த்து
ஆர்போவீரென்றே யடைவுடனேகேட்டதற்கு
இராசன்முகம்நோக்கி நன்றியெடுத்துரைப்பார்
அப்படிக்கொத்தகள்ள ரந்தநாட்டாரை
வெட்டிக்கறுவருத்து விருதுபெற்றவாரதற்கு
ஒருவராலாகாது உள்ளபடிசொல்லுகிறோம்
ஆயிரம்பொன்சேர்வையானதொருவீரனும
சேனைதளங்கூட்டித் தெற்கேயனுப்பிவைத்தால்
கள்ளர்பற்றுநாட்டையெல்லாங் கடுகாகத்தானறுத்து
சீக்கிரமாய்த்தான்வருவான் தெள்ளிமணிவீரையனும்
என்றுசொல்லியெல்லோரும் யிதமாயுரைக்கலுற்றார்
அந்தநல்லசேதியடைவுடனேதானேகேட்டு
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன் துரைராஜாவும்
வீரனைத்தானழைத்து வெகுமதியுந்தான்கொடுத்து
ஐயாயிரஞ்சேனைதளம் அடைவுடனேதான்கூட்டி
தக்கசாரிவிதைத் தானேகொடுத்தார்வீரையற்கு
வெள்ளைக்குடையும் வெண்சாமரமுடனே (து
பதினெட்டுமேளவாத்தியம் பாங்குடனேதான்கொடுத்

பஞ்சவர்ணடால்விருது பட்டாவுந்தான்கொடுத்து
அடைக்காயும்வெற்றிலையுமன்பாகத்தான்கொடுத்து
போய்வாருமென்றுசொல்லிப்போற்றிவிடைகொடுத்தார்
அனுக்கிரகம்பெற்றுக்கொண்டு ஆணிமுத்துவீரையனும்
ஏறினார்சிவிகையின்மேல் எண்ணமற்றசேனையுடனே
வெள்ளைக்கொடிபிடிக்க வெண்சாமரம்வீச
பொம்மியரண்மனைக்குப் பொங்கமுடன்வாரார்காண்
கன்னியரும்பார்த்துக்களிப்பெய்திக்கொண்டாடி
என்றுமடையாதவெக்களிப்புத்தானடைந்து
பூரித்துபொம்மியரும் பொங்கமுடன்வீற்றிருந்தார்
ஆணிமுத்துவீரையனு மரண்மனையில்வந்திருந்தான்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராசனுந்தான்
வுக்கிரமாந்தான் இறந்த வுத்தமனார்வீரையற்கு
சேனைத்தளத்திற்குஞ் செலவுமென்றுதுரையவரும்
முத்துக்கடுக்கனென்றும மோகனமாலையொன்றும்
சாலுவைகள்ரெண்டும் தார்வேந்தன்தானெடுத்து
கொல்லர்கையிலேகொடுத்துக்குணமுள்ளவீரனிடம்
கொடுத்துவரச்சொல்லி கொல்லனையனுப்பிவிட்டார்
கொண்டுவந்தகொல்லர் கொடுத்தார்காண்வீரையற்கு
வீரையனுமப்போது வெகுவாய்மனங்குளிர்ந்து
கொல்லனையனுப்பிவிட்டுக் குணமுள்ளவீரையனும்
கணக்கரைத்தானழைத்துக் கடுகவுரைக்கலுற்றார்
சேனைத்தளத்துக்கெல்லாஞ் செலவுக்குத்தான்கொடுத்தான்
௫-ஐந்துலட்சம்பொன்னெடுத்தவர் கையிலேகொடுத்து

கணக்கெழுதிவாருமென்று காரணனுமந்நேரம்
சமபங்கியெண்ணைகொண்டு தலைமுழுகிமயிராத்தி
செங்கமலக்கையாலே சீக்கிரமாய்த்தான்முடித்து
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
புனுகுசவ்வாது புண்ணியனுமேல்பூசி
கண்டவர்கள் தானமகிழ கஸ்தூரிப்பொட்டுமிட்டு
போசனமண்டபத்தே போயபுகுந்தான்வீரையனும்
சாதம் பலகையுந்தான்படைத்தாள்பொம்மியரும்
சாப்பிட்டிளைப்பாறி சரசமுத்துவீரையனும்
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தாமருந்தி
வாருமடிபொம்மியரோவார்த்தைசொல்லக்கேளுமென்று
ர்-மதுரையிற்கள்ளர்வந்து வழியிடக்குபண்ணுகிறார்
என்றுசொல்லிநாய்க்க ரிதமுடனேயழைத்து
போய்வாருமென்று போற்றிவிடைகொடுத்தார்
ஆகையினாலே ஆரணங்கேநீதானும்
பயணமதாகிப் புறப்படுநீபைங்கிளியே
என்றுசொல்லவீரையனு மெழுந்திருந்தேயந்நேரம்
பொம்மியருங்கூட வொற்றுமையுடன்போகலுற்றார்
சதுரங்கசேனையுடன்காலாள்களெல்லோரும்
பயணமதாகப் பார்மீதில்முழக்கமிட்டார்
பல்லக்கின்மேலே பைங்கிளியுந்தானேற
ஏறினார்குதிரையின்மேல் எடுத்தார்கள்பெரியகத்தி
படைக்குநல்லபார்த்தனைப்போற் பார்த்தாருந்தென்ம
துரை-மதுரைதிசைநோக்கி மங்கம்மாள்சாலைவழி
கடந்தான்காண் வீரையனும் நாலுதிசையதிர

ஆனையின்மேல்பேரிகையதிரமுழங்கிவர
குதிரையின்மேல்டக்கா கூடமுழங்கிவர
தமபட்டமகொமபு தவில்முரசுதானறைய
பஞ்சவர்னடால்விருது பக்கமெல்லாஞ்சூழந்துவர
புண்ணியனார்வீரையற்குப் பூக்சக்ரக்குடைநிழற்ற
இருபுரம்வெண்சாமரமும் யினபமுடன்வீசிவர
கட்டியங்கள்கூறக் கவிவாணர்பாடிவர
நடக்தான்காண்தென் திசையில் நாலுதிக்குந்தானதிர
சேனைவருகிறதுஞ் செந்தூள்பறக்கிறதும்
காடுமலைகடந்துகரியதொருசோலைவிட்டு
சில்லெலனுங்காடுவிட்டுச் செடிமலைபுந்தான்கடந்து
மணப்பார்வழிதனிலே வந்தடித்தார்கூடாரம்
கூடாரந்தானடித்துக் கோட்டைசலாதிவிட்டு
வீரையனுமவந்து விடுதியிற்றங்கினபின்
பொம்மியருமவீரையனும பொங்கமுடன்வீற்றிருந்தா
ர-தேசத்திலுள்ள திரள்மன்னரத்தனையும
பாளையக்காரர் படைமன்னர்விருமாய்
வீரையனைக்காணப் வெகுமதியுந்தானெடுத்து
வந்துமேகண்டு வணங்கியேதெண்டனிட்டார்
ஆரென்றுசொல்லி அன்பாகத்தான்கேட்டார்
பாளையக்காரென்று பாங்குடனேசொல்லையிலே
எங்குவந்தீரென்று மிதமுடனேதான்கேட்க
கள்ளருபத்திரங்கள் கனமாயிருக்குதென்ன
அஞ்சாதிருங்களென்று ஆதரவுசொல்லையிலே
பாளையங்களெல்லாம் பசியாயிரங்கினபின்

மணப்பார்சுப்பையனுங் மங்கபதிநாய்க்கருந்தான்
விரையனைவந்துகண்டு வேந்தர்களுமப்போது
ஆனிமுத்துவிரையற்கும ஆனதொருருனுவுக்கும்
அரிசிபருப்புடனே ஆனபதார்த்தங்களுடன்
விரையற்கும்பொம்மியற்கும் விருந்துசமைத்தார்கள்
பொம்மியரும்விரையனும் பொங்கமுடன்தான்புசித்து
சாப்பிட்டிளைப்பாறித் தாம்பூலந்தாமருந்தி
பள்ளிகொண்டாரிருவருமாய்ப் பாங்கானமெத்தையி
லே-கங்குல்விடிந்தபின்பு கதிரோனும்வந்துதித்தான்
பயணமென்றுசொல்லி பாரசினமூதலுற்றார்
தென்றிசையைநோக்கிச் சீக்கிரமாய்வருகையிலே
வேகமாய்வருகிறது வீரையனசேனையென்று
தோராதலைக்கையனுந் தம்பிக்கைபூச்சியனும்
இரண்டுதுரைமாறு மேற்றமுள்ளராணுவுடன்
மரபபூண்டசாலையிலேவந்துயெதிரேநின்று
கைகுவித்துகெண்டனிட்டு கட்டளைக்குத்தாமிருந்தார்
விரையனுமப்போ விரைவாகத்தானழைத்து
எங்குயிரங்கலாமென்று சொல்லித்தான்கேட்டார்
அடியேங்களாங்க ளறிந்தமட்டுஞ்சொல்லுகிறோம்
துவரங்குறிச்சிக்குத் துருசாகப்போய்ச்சேர்ந்தால்
தண்ணீர்சவுக்கியமுஞ் சாலைநல்லதோப்புகளும்
பேட்டைநல்லசாவடியும் பெரியகடைத்தெருவும்
ஊருக்குமேற்கே யுயர்ந்தகிராமமுண்டு
பாளையந்தானிரங்க பதிவானயிடமுமுண்டு
என்றுசொல்லியப்போது யேற்றமுடன்தானுரைத்தா

நல்லதென்று சொல்லி நடந்தான்காண் விரையனும்
பாளயப்பட்டார் பாளைகொண்டுகொட்டலுற்றார்
சேனைபடைத் தளமுந் தீர்க்கமுள்ள விரையனும
திவாங்குருச்சிக்குத் துருசாகப்போய்ச்சேர்ந்தார்
ஊருக்குமேற்கே வுயர்ந்திருக்குமேட்டின்மேல்
அனுமந்தகூடாரம் அடைவாகத்தானடித்தார்
கோட்டைசலாதுவிட்டுக் கொள்ளைகொண்ட விரைய
னும்-விடுதியில்தானுமிப்போ விற்றிருக்கானென்ம
துரை-அந்தநல்லவேளையிலே ஆநகொருலக்கையனும்
தம்பிக்கைபூச்சியனுந் தரிதமுடன் விரையற்கு
விதவிதமாயஉலுப்பைகள் விபரமாயனுப்பலுற்றார்
நெய்குடமுந் தயிர்க்குடமும் நோரணபாற்குடமும்
ஆட்டுக்கிடாக்களு மடைவானபன்றிகளும்
கோழியுடன் காய்கறியும்கொள்ளைகொண்ட விரையற்கு
அத்தனையுயான்பேரி லன்பாயெடுப்பித்து
எடுத்தங்கேசென்றிவற்றை எதிராகத்தான்வைத்து
லக்கனும்பூச்சியனு மிசைவாகக்கைதொழுதார்
கூடவேகைதொழுது குணமுள்ள விரையனும்
வாருமென்று சொல்லி வரிசையுடனேயழைத்து
இருவர்துரைமக்களுக்கு மின்பமொடுவிரையனும்
ஆளுக்கோர்சாலுவை அன்பாய்பரிகளிக்க
இனிதாயுபசரித்து இருங்களென்றவார்த்தைசொல்ல
அகங்குளிர்ந்து துரைமக்க ளமைதியுடனங்கிருந்து
விறையற்குபொம்மியற்கும் மேலானவிருந்துசெய்ய
சம்பாவரிசிகொண்டு சமைத்தார்கள்காய்கறிகள்

ஆட்டுக்கரியும் ஆணபல்காரமுடன்
அளவிலாக்கறிவகைக ளதிகசுவையாய்ச்சமைத்தே
இவ்விருவருக்குமன்னம் படைத்தார்களப்போது
உண்டுபசியாறி உட்கார்ந்திளைப்பாறி
தாம்பூலந்தான் தரித்துச் சயனித்தார் பூவணைமேல்
பூச்சையனும்லக்கையனும் பொழுதுவிடியுமட்டும்
கண்ணிமையைக்காப்பதுபோற் காத்திருந்தார்கடிதாக
அன்பர்வினைபோ னகலவிருட்கூட்டம்
பச்சையிலைமேற் பரிதியும்வந்துதித்தான்
தூக்கமொழித்துத் திடுக்கென்றெழுந்திருந்து
தந்தந்துலக்கித் தடாகத்திநீராடிச்
சிவசிவாவென்று திருநீறுகாப்புமிட்டு
வண்டத்துலுக்கரைப்போல் வடிவுள்ளபாகைகட்டி
அங்கிசிசாதொட்டு அடைவுகேகச்சைகட்டி
பதினெட்டுஆயுதமும் பாலகுடனேதான்பிடித்து
கூடாரந்தான்பிரிங்கிக் கொள்ளைகொண்டவீரனுமே
எதிரொர்வாசி யெடுத்தார்பெரியகுடை
பயணம் புறப்பட்டார் பரிவாரந்தனோடு
ஊதிறுதன்னம் உலகமெல்லாந்தானதிர
வீரன் தன்சேனை வெகுவாய்வருகுதுகாண்
நத்தத்துவின்னையும் நாழிகையிற்றன்சேட்டு
வீடுமெழுகி விப்பானகோலமிட்டு
தோரணங்கட்டி சுபகோலந்தானுமிட்டு
வீரனுக்கும்பொம்மியற்கும் வீடுஇயலங்கரித்து
விதிக்குவிதிவிதமாகப்பந்தலிட்டு

படியரிசியாவற்றும பாங்குடனே தான்கொடுத்து
அடிபணிந்துவீரனுக்கு அடவுடனே தான்கொடுத்தான்
கண்டுமனமகிழ்ந்து கனப்பரியமுண்டாகி
வாறுமென்றுசொல்லி வாஞ்சையுடன் தானழைத்து
மோகனமாலையொன்றும முகத்துக்கடுக்கனொன்றும
வெகுமதியாகக்கொடுக்க வீரையனுமப்போது
நத்தத்துவீதியிலே நவமாகப்போயிறங்கி
சந்தோஷப்பட்டுக் தனஞ்சயனுமவீற்றிருந்தான்
நத்தத்துலிங்கையனும நல்விருந்துதான்செய்தான்
பொல்லாத்தரித்திரமாம் புன்னிரவுபோனவுடன்
நல்லசுபதனென்னும நாயலறுள்வந்துதிக்கும்
மற்றுநாள்காலையிலே மன்னனெழுந்திருந்து
தந்தசுத்திசெய்து தானணிந்தானவெண்ணீறு
பாளையத்தைச்சரித்தான் படைமுரசுகாண்திறந்து
மதுரையைநோக்கி மனமகிழ்ந்துசெல்கையிலே
சதுரங்கசேனைகளும சதிராகத்தானடந்து
காடுமலைகடந்து கடியவனங்கடந்து
திருமலைநாய்க்கரிட சீமைதனைத்தொடர்ந்து
வைகைக்கரையோரம வந்திறங்கியப்போது
அண்டமுகடதிர அடித்தார்கள் கூடாரம்
பொம்மியனுந்தானும பொங்கமுடன்வீற்றிருந்தார்
கூடாரம்வந்தபின்பு கோட்டைத்தலையாறி
திருமலைநாய்க்கனமுன் திடீலென்று ஓடிவந்து
வடக்கேயிருந்து வருமையாசேனைதளம
மாற்றான்படையோ மருமன்னர்தன்படையோ

[illegible]
என்றுசொல்லித்தலைபாரி வணக்கமாகத்தானின்றான்
திருமலைநாயக்கரும் சேதிதனைக்கேட்டு
ஆனாலென்ன ஆகட்டுமென்றுசொல்லி
அறிணவப்பிரமணனை யன்பாகத்தானழைத்து
ஆவென்றுசொல்லியறிந்துமெள்ளவாருமென்றார்
அப்போதேவேதியரு மாண்சிங்கவீரனிடம்
போனார்கள்சேதிதனைப் பூராயமாய்த்தெரிந்தார்
வேதியனைத்தானழைத்து வீரனுஞ்சொல்லலுற்றான்
விசையரங்கசொக்கலிங்க வேந்தனெனையழைத்து
மதுரைக்குட்சென்று வண்டரெனுங்கள்ளர்களை
அடக்கிவாவென்று மதித்தெனையனுப்ப
ஆகையினாலேயிங்கு அடைவுடனேவந்தேனென்றார்
சீக்கிரமாயுத்தரத்தை திருமலைநாய்க்கன் முன்னே
சொன்னார்களன்னேரம துரைநாய்க்கன்தான்கேட்டு
வீரனுக்குவேண்டும் விடுதியெல்லாமமைத்து
வாசர்பிரதானி வரிசைபெற்றசாம்புவனை
எதிராகப்போராகின்ற வேந்தலெனும்வீரனைத்தான்
அழைத்துடனேவாருமென்று ஆக்யாபித்தேயனுப்ப
சாம்புவனுமப்போது தார்வேந்தன்சொற்கேட்டு
எழுந்திருந்துவாசியின்மே லேறிப்போனானுடனே
குதிரைபரிவாரங் கோடிதளம்பின்றொடர
பதினெட்டுமேளம்பண்பாயறைந்துவர
வெள்ளைத்துகில்விசிறி விதமுடனேதானடந்தான்
சேனாபதிசேனை தளமும்வருகிறதை
வீரனுமப்போது வெகுவாமனமகிழ்ந்து

ஆனைபீதளவுதான் அழகாகவேயியற்றி
மத்தகத்தைத்தொட்டு மகாவீரனைபொம்மியரும்
எறியுருக்கார்த்து இனிதாய்வழிநடக்க
ஆணிமுத்துவீரனுமே யானைமனையில்வந்திரங்கி
சம்பங்கிஎண்ணெயால் தலைமுழுகிமயிராற்றி
கோதிமயிரைக் குடுமிகட்டச்சிக்கறுத்து
சீரானநெற்றிதனில் திருநீருதானணிந்து
செந்தமுங்கஸ்தூரி கீறினற்மார்பதனில்
கட்டுவார்க்கந்தானணிந்து காரணனுமப்போது
அறுசுவையோடன்ன மருந்தியிளைப்பாறி
ஏலம்லவங்கமுடன் யிளம்வெற்றிலைபாக்கும்
தரித்துவிளையாடிச் சரசபொம்மியைப்பார்த்து
வாருமடிபெண்ணேஒருவார்த்தைசொல்லக்கேளுமடி
கள்ளரைக்கொல்ல கட்டளையிட்டாரடி
திருமலைநாய்க்கரது தெரிசனஞ்செய்வதற்கு
போய்வாரேனென்று பொன்பல்லக்கேறிப்போய்
திருமலைநாய்க்கருக்தான் சிறப்பாய்கொலுவிருக்கும்
ஆசாரவாசல்வர அழகாகத்தான்கடந்து
பல்லக்குடிவிட்டிறங்கிப் பாருளும்வீரனுந்தான்
திருமலைநாய்க்கரைத்தான் சேவித்துகொண்டுநின்றான்
கூடவேநாய்க்கருந்தான் கும்பிட்டுத்தானெழுந்து
பக்கமிருந்துகொண்டு பண்பாகவார்த்தைசொல்வார்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுக்கள்ளரெல்லாம்
மதுரைக்கடைத்தெருவை வந்துமெள்ளக்கொள்ளையி
ட்டு-தாலிமுதல்சேலையெல்லாந்தாங்கள்பறிப்பதனால்

விஜயரங்கசொக்கலிங்க வேந்தன் துரைராஜனுக்கு
எழுதிவிட்டவப்படியே யியற்கையுள்ளராசனுமே
உமமையனுப்பினதாலநீர்வந்திர்மன்னவனே
கள்ளர்களங்கள் கருவையறுத்துவாரும்
என்றுமேநாய்க்கர்சொல்ல யிணங்கியவீரனுமே
பட்சத்தினத்திலே பட்சமில்லாக்கள்ளரைத்தான்
வெட்டிகருவறுத்து வெற்றிகொண்டுவாரேனென்றார்
நாய்க்கரதுகேட்டு நன்றாய்மனங்குளிர்ந்து
வீரனுக்குதக்க வெகுமதிகளைக்கொடுத்து
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தான்கொடுத்து
அரண்மனைக்குப்போவென் றனுப்பினார்வீரனைத்தான்
அரண்மனையில்வீரனுந்தாரடைவுடனேதானிருந்தான்
அன்றிரவுநீங்கி யாதித்தன் வந்துதித்தான்
வீரனெழுந்திருந்து விடியற்காலக்கடனை
எல்லாமுடித்து நகரெங்குமுலாத்திவந்து
சாப்பிட்டிளைப்பாறிச் சாமிதுரைவீரனுந்தான்
சாயங்காலந்திவட்டி தான்போட்டுக்கொண்டுமவன்
சொக்கரிடசன்னிதிக்கு அநுசாகத்தோடேக்கி
தீபார்த்தனைவேளைக்குத் தினமபோய்வரும்போது
வருகிறகாளையிலேமலைத்திருடர்கள்ளரெல்லாம்
கூட்டமிட்டுவளைதடியைக் கொண்டுபுறப்பட்டு
மதுரைக்கடைவீதி வந்துநுழைந்துகொண்டு
காசுபணம்நாணயத்தைக் கணக்கவேகொள்ளையிட
பட்டணத்திலுள்ள பரிசனங்களெல்லோரும்
கோவென்றசத்தங் கூக்குரலுமதானுமிட

நகரத்தலையாரி நாட்டமுடனேடிவந்து
வீரனுடனேசொன்னான் வீரனுமப்போது
இணக்கமுள்ளபொம்மியர்க்குயிதுசேதியைச்சொல்லி
குதிரைமேலேறிக் கூருயுதந்தரித்து
சேனைதளத்துடனே சிறப்பாகவேசென்று
வடக்குநல்லவாசலிலே வகையுடனேதானடந்தார்
நலமுடனேவீரனுமே நடந்தான்காணம்மானே
பொல்லாதவீரன்தான் போர்செய்யக்கோபித்து
பட்டாவுருவிக்கொண்டு பதட்டமுள்ளகள்ளர்மேல்
பாய்ந்தான்குதித்தான் பதிவிருந்துதானுழைந்து
வீசினான்கள்ளர்களை விருதிவீரனுந்தான்
முன்விச்சுக்காயிரம்பேர் முனைவிச்சுக்காயிரம்பேர்
இந்தப்படிக்கு யிறக்கடித்தான்வீரனுந்தான்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுக்கள்ளர்களும்
கொக்கரித்துசேனைதளம்கோடிபடைதானவந்து
ஈட்டிக்கோலாலே எறிந்தார்கள்வீரையன்மேல்
கண்கள்சிவந்து கடுங்கோபந்தான்பூண்டு
வாகுநல்லசமுதாடு வண்மையுடன்றான்பூண்டு
யானைக்கூட்டத்தில்யாளிவந்துபாய்ந்ததுபோல்
பொல்லாதவீறன்மேல் பூர்த்தியாய்விசனுற்றான்
கள்ளர்படைகளெல்லாம கலங்கியேமெய்மறந்து
மெய்சோர்ந்துவிழுவாரும் விதிவசமோயென்பாரும்
ஆதிசிவனுக்கபயமென்றுவிழுவாரும்
ஈட்டிக்கோல்வைத்தபடி யிறந்துமடிவாரும்
அச்சமற்றநாட்டுக் கழிவுவந்துநேர்ந்ததென்றும்

இன்றுமுடிந்ததுகா ணெங்கள்பலமெல்லாம்
கள்ளரெல்லாம்புலம்பிக் கைசோர்ந்துவிழுந்தார்கள்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
கள்ளர்படைசேனையெல்லாங் கதறலுற்றதவிறன்றனை
தேவரெல்லாங்கண்டு சிறப்புடனேபார்த்திருந்தார்
நாலுதிசைமெச்சவீரனற்கொலுவில்தானிருந்து
வெள்ளானைமீதேறி வெற்றிகொண்டுவாறாகாண்
பஞ்சவர்ணடாலவிருது பக்கமெழுந்துவர
நாகசுரமேளம் நாட்டியப்பெண்ணாடிவர
மதுரைதிசைநோக்கிவாறார்காணம்மானே
கள்ளர்பற்றுநாட்டையெல்லாங் கடையாய்பறக்கவிட்
சகலசமபிறமத்துடனே சாமிமுத்துவிசயருமு (டு
வருகிறாரென்றவகையுள்ளதூதர்களும்
கச்சித்திருமலைநாய்க்கர கனத்தகொலுவில்வந்து
சேதிகளையெல்லாஞ்செப்பலுற்றனனேயம
கச்சித்திருமலைநாய்க்கர் காதுகொடுத்துக்கேட்டு
சந்தோஷப்பட்டுத் தாதியரைக்கூப்பிட்டார்
தென்னாட்டுமீனாட்சிச் செண்பகப்பூநாச்சியரோ
பச்சைகிளித்தாளே பவளக்கொடியாளே
மாசிலாப்பத்தினியாள் வானத்தரங்கதியாள்
இரதப்படிக்கு யியல்பானதாதியரும்
ஆபிரத்திபமையபாக வேயழைத்து
வெற்றிகொள்விரற்கு திருஷ்டிகழித்துவர
ஆலாத்திசோடித்துடைவுடனே அன்பாக
எதிர்கொண்டுபோவென நேசமானதுடனேதான்

நவரத்தினம்பதித்தநல்ல ஆலாத்திசாடித்து
ஆணிமுத்துவீரனுக்கு ஆலாத்திசுத்தினார்கள்
அந்தமுள்ளபெண்களின்மேலாசைகொண்டுவீரன்றன்
மாளிகையைவிட்டுநக்கயரணமனைக்குள்ளேசென்று
திருமலைநாய்க்கன்றனைச் சிறப்புடனேபோய்க்கண்டா
ன்-அந்தநல்லநாய்க்கனும அன்புடனேவீரனுக்குக்
கைலாகுதான்கொடுத்து களிப்புடனேதரவழைத்து
சிங்காதனத்தருகே சிறப்பாயிருக்கவைத்து
அடைக்காயும்வெள்ளிலையுமன்புடனேதான்கொடுத்து
கள்ளர்பற்றுநாட்டையெல்லாங்கறுவறுத்தவந்திர
உம்மைப்போல்தேசத்தி லொருவரையுங்கண்டதில்லை
இனிப்போடிருக்கின நீமேற்றமுள்ளவிரையனே
காலையிலேவந்து கலந்துவசனிப்போம்
என்றுசொல்லிநாய்க்கர்யிசைவாசத்தானனுப்ப
நல்லதென்றுவிரையனும நாய்க்கரைத்தான்றொழுது
அரண்மனைவாசல்விட்டு அடைவாசத்தானடந்து
யானைமேலேறியாணிமுத்துவிரையனும . (ர்ந்து
பொம்மியரண்மனைக்குப் பொறுமையுடனேபோய்ச்சே
கட்டுவற்கந்தானவிழ்த்துக் காரணனுமந்நேரம்
வெந்நீரினாலே விசையனுமஸ்நானஞ்செய்து
கோதிமயிராற்றிக் கோணுமற்சிக்கறுத்து
வாரிமுடித்து வகையுடனேவேஷ்டிகட்டி
சிவசிவாவென்றுசொல்லித திருநீறுதானுந்தான்
உண்டுபசியாறி உத்தமனார்விறனுந்தான
அடைக்காயும்வெற்றிலையு மன்புடனேதாமருந்தி

பஞ்சணைமெத்தையின்மேற் படுத்துயெழுந்தவுடன்
ஆலாத்திபெண்களிலே ஆனதொருவெள்ளையின்மேல்
தீராதவாசைகொண்டு சீக்கிறமாயெழுந்திருந்து
கட்டுவர்க்கதாறுடுத்திக் கனகப்பணிபூண்டு
சீவிநல்லகொண்டையிட்டுச்சிங்காரமாயநடந்து
கோட்டையினமேலேறிக் குதித்தான்காணம்மானே
வெள்ளையம்மாள்தன்வீடுதேவகமுடனேநோக்கியவன்
அங்கயற்கண்ணம்மன் அடிபணியும்வெள்ளையம்மாள்
மீனாட்சிசன்னதிக்குமுன்பாகமாளிகையில்
தூக்குமஞ்சக்கட்டிற் றலங்கவலங்கரித்து
பஞ்சணைமெத்தையின்மேற் பைங்கிளியாள்வெள்ளைய
நினைவுதெரியாமல் நித்திரைதான்செய்கையிலே (ரும்
உல்லாசமாகவொயிலழகர்தென்மதுரை
விதிப்பயனென்று நல்மெல்லியர்மேலாசைகொண்டு
மதிலேறித்தான்குதித்துமண்டபமுந்தான்கடந்து
பத்தினியாள்பள்ளிகொண்ட பாரவீடந்தன்னில்வந்து
இருந்துநினைத்தான எண்ணமுற்றகாளையவன்
தட்டியெழுப்பினான் தையலெழுந்திருந்து
கூவென்றால்வெள்ளையருங் கூடிவாரார்மாதரெல்லாம்
என்றுபலவாறு யெண்ணியெண்ணியேக்கமுற்று
முருகர்துணையென்று மூர்க்கமுள்ளவீரனுமே
தோளினில்மீதிருந்த துப்படிக்கீழ்பரப்பி
மெள்ள அசையாமல் மெல்லியைத்தூக்கிவைத்து
கட்டியிறுக்கி கைலாகுகொண்டுதூக்கி

மாளிகையும்விட்

தானிருக்குங்கே

வேவுகாரர்கள்

ஆரென்றுசொல்லி அதட்டியவா

பத்தினியைக்கொண்டுவந்த பாவமபலித்ததென

எங்கிமுகம்வாடி என்னசொல்லப்போறேமென்று

ஒன்றுஞ்சொல்லாமலூமைப்போல்தானிருக்க

திருமலைநாயக்கருக்குச் சேதிசொல்லிவாருமென்று

அனுப்பிவைத்தார் தூதுவனை ஆனவொருசேவகனும்

தூதுவரும்போது அருசாகத்தானோடி

ஆசாரவாசல்நின்று அடைவுடனேசொல்லலுற்றார்

திருமலைநாயக்கர் சேதிதனைக்கண்டு

கள்ளனையிங்குகாணக் கொண்டுவாவென்றுசொல்ல

கட்டளையிட்டபடிகாவலர்களோடிவந்து

கள்ளனென்னும்வீரையனை கட்டியமூட்டையுடன

நாய்க்கர்முன்னேகொண்டுவந்து நடுநீதிகேட்கலுற்றார்

திருமலைநாய்க்கருந்தான் திருடர்மூட்டையைத்திறந்து

பார்க்கும்போதங்கேபாவைவெள்ளம்மையென்று

கண்டவனைத்தானிருத்திக்கள்ளனைக்கும்றத்திறனல்

கானகத்திற்கொண்டுபோய் கைகாலைவாங்குமென்றார்

...ாயவரும்
...துவிட்டார்
...ாக்தான்
...றுதான்சொல்லி
...ணையிருக்குமந்தவேளையிலே
...போதுவெள்ளையரும் அசந்துநித்திரைதெளிந்து
பார்க்கவேவீரனைபசுவமாயநின்றிருக்க
கண்டவுடன்யோசித்து காக்காரியுஞ்சொல்லுகிறாள்
நானேபதிவிரதைநியாயந்தெரியாமல்
தொட்டுயென்னையெடுத்துத் தூக்கியேவந்ததினால்
இனியெனக்குநீபுருஷன் என்பதற்கோரையமில்லை
பொல்லாதகோவேகூடவேநான்வருவேன்
உன் துக்கம்என் துக்கம் ஒன்றல்லால்வேறில்லை
ஒற்றுமையாகியுயிரைவிடுவேன்காண்
என்றுதிடமாக இயம்பினாள்வெள்ளையரும்
இவள்சொல்லுஞ்சொற்கேட்டுஇருந்தவர்களப்போது
ஆணிமுத்துவீரனென்று அனைவோருந்தாமறிந்து
உண்மையாயின்றென்று உண்மையறியாமல்
கைகாலறுத்துவிட்டகாரணத்துக்கென்னசெய்வோம்
என்றுசொல்லிசேவகர்கள் இணங்கிவணங்கலுற்றார்
காலில்விழுந்து கதறியழுகலுற்றார்

அழுகசத்தந்தான்கேட்டு ஆரணங்குபொம்மியரும்
ஆசாரளவுடரா அதிகஅவருமேவாமென்று
அன்னம்போலேவந்து அருகில்வந்துதானின்று
வீரனைத்தான்பாத்து விம்மிவிம்மித்தானழுது
பாதகாகானிதந்கோபத்திவந்தேனுன்பிறகே
கால்கையறுப்புண்டிருக்கக்காணவோவந்தேனன்
எழுத்தையறியாமல் எண்ணினேன்கோடிசிந்தை
ஆண்டவனேயுந்தனுக்கு அசடுவந்தவாரேது
மன்னவனேயுங்கனையும் வழிமறிப்பாருண்டோதான்
என்றுசொல்லிபொம்மியரும் ஏங்கிவிசனமுற்றாள்
புருஷனும்வாய்திறந்து பொம்மிக்குசொல்லலுற்றான்
ஆதிசிவனபிர்மா அன்புள்ளமாயனுமே
கூட்டியெழுதினதைக் குறிப்பாரேபெண்ணரசே
எழுத்தையழிக்க எவரால்முடியுந்தான்
சூரியகுலத்துதித்துத் தோற்றமுடன்வீற்றிருந்தான்
மாறுபடாவம்மிசத்தில் வந்துபிறந்தேன்காண
பொம்மியரேநானும் பூமியிலிருப்பதில்லை
மீனாட்சிபொற்பதத்தை விருப்பமுடன்சேர்வதன்றி
அரைகொடியுமநானிருக்க அதிகாரமில்லையடி
ஆரணங்குபொம்மி அதுசேதிதான்கேட்டு
மன்னவனேயுன்னைவிட்டு [illegible]மேலிருப்பதில்லை

கூடவருவேன்காண் கொள்ளைகொண்டராசாவே
என்றுசொல்லிபொம்மியிதக்கமாய்தானடந்து
வைகைநதியில்வளமயிலாள்ஸ்நானம்பண்ணி
கூந்தலுதறியங்கே கோடாலிமுடித்தான்போட்டு
கூறையுடுத்திக் கோலப்பணிபூண்டு
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
எலுமிச்சங்காய்கையில் ஏந்திக்கொண்டுதானடந்து
அம்பாமீனாட்சி அடியாளும்வாரேனம்மா
சிவசிவாசொக்கலிங்கர்சீர்பாதங்காணவென்று
பயணம்பயணமென்று பைங்கிளியுந்தானடந்து
வீரனிருக்குமிட மேவியேதான்சேர்ந்தாள்
அந்தவிதமாயிருக்கும் அவ்வேளையில்மிகவும்
வெள்ளையருந்தான்பார்த்துவிதவிதமாய்த்தானணிந்து
என்னொருபெண்ணாலே இடியேதுவீரனுக்கு
சொல்லரியபொல்லாங்கு சுகமாகவந்ததினால்
திருமலைநாய்க்கருக்கு சேதிதனைச்சொல்வோமென்று
வாடியமனதுடனேவந்துநின்றுசொல்லவேதான்
திருமலைநாய்க்கர் சேதிதனைக்கேட்டு
அருமையுள்ளபிள்ளைக்கு அசடுவந்துநேர்ந்ததென்று
ஆசாரவாசல்மட்டும் அலறியேதான்புரண்டு
ஆடைகலைய ஆபரணந்தான்புரள

ஓட்டமாயோடிவந்து உத்தயனைத்தான்பார்த்து
அப்பாமகனேயென்று அலறியேதானழுது
வெள்ளையனைவேணுமென்று விதமுடனேசொல்வாயா
னால்-கோதைமயிலைக் கூட்டிவந்துதாரேனே
எந்தனதுபெண்ணை இஷ்டமுடன்கேட்டாலும்
கல்யாணந்தான்முடித்துக் கண்ணாலேபாரேனே
நான்தாண்டாவீரனென்றுநலமுடனேசொல்லாமல்
பேசாமலிருந்ததினால் பிழைமோசம்வந்ததுகாண்
என்றுசொல்லிநாய்க்கர் ஏங்கிமுகமவாடி
மீனாட்சிசன்னதிக்கு விருப்பமுடன்தான்சென்று
உத்தரவுதான்கேட்டு ஒருநொடியில்நான்வருவேன்
என்றுசொல்லிப்போது இசைவுடனேபோனார்கள்
சொக்கர்திருவாலயத்தில் துருசாகப்போய்புகுந்து
மூக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
திரிபுரமெரித்தவர்தன் தேவிபரமேஸ்பரியே
வீரனுக்குவந்த விதிப்பயனைத்திருமம்மா
கைகால்வளர்ந்து கடுகவெழுந்திருக்க
வேண்டுமம்மாதாயே வேதாந்தநாயகியே
என்றுசொல்லநாய்க்கர் ஈஸ்பரியுந்தான்பார்த்து
கால்கையுந்தான்வளரக் கட்டளையுமிட்டாள்காண்
திருமலைநாய்க்கருந்தான் திருப்பிவருவதற்குள்
மீனாட்சிகிருபையினால் வீரனுக்குமுன்போல

காலையுந்தான்வளர்ந்து கடுகவெழுந்திருந்து
திருமலைநாயக்கர்முன்னே சீக்கிரமாயோடிவந்து
வாருமையாராஜாவேவார்த்தைசொல்லக்கேளுமையா
மாறுபடாவம்மிசத்தில் வந்துபிறந்தேன்காண்
மாறுபடாமேனியிலே மாறுபடவாச்சுதுகாண்
பூலையாலென்னுயிர்தான்பொன்னுலகம்போகுதையா
அன்றெனக்குஆயனெழுத்துப்படியே
வாய்த்ததென்றுவீரன்வண்மையுடன்தானுரைக்க
காதுறக்கேட்டு கண்ணீர்விட்டார்நாயக்கரவர்
வாழ்வும்பெருஞ்செல்வம்மாயமிதுராஜாவே
நீரின்மேற்குமிழிநிலையற்றவாழ்க்கையிது
நன்றாயிருந்தாலும் இறப்பதுநிச்சயந்தான்
சலிக்காதீர்தானெழுந்ததர்மமோராஜாவே
என்றுசொல்லிவீர தீரமாகத்தேற்றினார்
பெண்களிருவருமேபிரியமாய்த்திக்குதிக்க
நற்சவுக்கமாக நலமான தீக்குழியை
உண்டுபண்ணிவைக்கநீருந்தாரஞ்செய்யுமென்ன
திருமலைநாயக்கன் சேதியிதுதெரிந்து
வைகைக்கரைக்குத்தான்போய் மாந்தோப்புக்குட்புகுந்து
தீக்குழிக்குஆனசெம்மையுள்ளதாவதனை
கண்டுகுறித்துக்கடுகவேவெட்டிவைத்து
சந்தனக்கட்டைகொண்டுசதுரமாகத்தானபரப்பி
தீக்குழியைச்சுற்றிசெயமங்களஞ்சொல்லி
வேதியரைத்தானழைத்து விதியாகச்செய்யென்றார்

ஆலாத்திசுற்றுமபெண்ணானதொருவெள்ளையரும்
பொன்னானதிருமேனிபொமமியருங்கூடவேதான்
ஏற்றமுள்ளவீரன்முன்னேயிருவரையுந்தானழைத்து
அன்னதானஞ்சொர்ன்னதானமன்பாகச்செய்வித்து
கோதானப்பூதானங்கோதையரால்செய்வித்து
சாரிகையேகீங்களிருவர் கைலாயஞ்சேருமென்றார்
காதினால்கேட்டுக்காரிகைகள்தாமுமப்போ
பூரித்துமேனி பொங்கியிருவருந்தான்
பூண்டிருந்தஆபரணம பொறிபொறியாய்த்தான்றெறிக்க
சந்தோஷமாயிருவர் சாமிமுத்துபாதத்தில்
அடைவுடனேதெண்டனிட்டு அன்பாயிருபேரும்
இருபேருந்தெய்வத்தை இதமாகவேதொழுது
சுத்திவந்துதீக்குழியைச் சுத்தமனதுடனே
சந்தோஷமாகவேதான சாமிமுத்துபாதத்தில்
அடைவுடனேதெண்டனிட்டு அன்பாயிருபேரும்
இருபேருந்தெய்வத்தை இதமாகவேதொழுது
சுத்திவந்துதீக்குழியை சுற்றமனதுடனே
சந்தோஷமாகவேதான் சலியாமலேதுதித்தார்
தேவாதிதேவரெல்லாந் திட்டமுடனேபார்த்து
ஆகாசகந்தருவர் அனைவோருமபூச்சொரிய
தேவதுந்துமிதானுஞ்சீக்கிரமாய்தான்முழங்க
தீக்குழியைவீரனுமே சீக்கிரமாய்த்தான்மூடி
சடங்குகளெல்லாஞ் சதிராகத்தானமுடித்து
வைகைநதிக்கரைக்கு வண்மையுடன்தானடந்து

ஸ்நானமதுசெய்தபின்பு தயவாகப்பிராமணர்க்கு
வஸ்திரங்காசிபணம் வண்மையாய்த்தானங்கொடுத்து
பொற்றாமரைக்குளத்தில் பொறுமையுடன்போயிரங்கி
கோடாலிமுடியவிழ்த்து குதித்திமேஸ்நானஞ்செய்து
சிவசிவாவென்று திருநீறுதானுமிட்டு
சந்தனமபுனுகு சவ்வாதுடனகதமபம்
பூசிதிருமேனியெங்கும் பொங்கமுடன்தாமணிந்து
மிதியடியும்பூண்டுமேல்ருத்திராட்சந்தாமணிந்து
என்தாயேமீனாட்சி ஈஸ்வரியேயென்றுசொல்லி
காளைமுத்துவீரனுமே கடுகாகத்தானவந்து
ஆதிசிவனேயென்று அன்புடனேதான்வந்து
மீனாட்சிசந்நிதி முனவீரையனுமவந்துநின்று
முக்கால்வலம்வந்துமூவிருகாலதெண்டனிட்டு
திருமலைநாய்க்கர்தனை திரும்பிமுகம்பார்த்து
வாருமெனறுசொல்லிவண்மையுடனழைத்து
மீனாட்சிபொற்பாதம் விதமுடனேசேவகற்கு
உத்தரவுசெல்லுமென்று ஒருவார்த்தைதான்கேட்க
மனதுக்குகந்தபடி மகிழ்ச்சியுடனிருமென்றார்
போய்வாரேனென்றுசொல்லி கூறியேவீரனுமே
பார்வதியின்கோயில் பதினெட்டாம்படியேபோய்
என்தாயேமீனாட்சிஎனக்கென்னபுத்தியென்றார்
மூந்திரபூசைமுதற்பூசையுன்னுடதான்
கமபத்தடியில் காத்திருந்துபூசைகொள்வாய்
என்றுசொல்லமீனாட்சி ஏற்றவரங்கொடுத்தாள்

காளைமுத்துவீரனுந்தான் கம்பத்தடியில்வந்து
கன்றுக்குஞ்சூரிதனைக் கையிலேதான்வாங்கி
பார்வதியேயுமதன் பாதங்கதியென்று
கடிகிவாறுமல்கழுத்தையறுத்துக்கொண்டான்
வீரன்சிரசுதான் மீனாட்சிபாதமல்விழுவே
அல்லவருங்கூடி ஆச்சரியப்பட்டார்கள்
வீற்றிருந்தசேனையுடன் திருமலைநாய்க்கரையும்
மீனாட்சியம்மனப்போ விடுதிபோயசேருமென்றாள்
அப்படியேயெல்லோரும் அரண்மனைபோய்ச்சேர்ந்தார்
கள் - அன்றுமுதல்மூன்றுநாள் ஆணிமுத்துவீரனுக்கு
பூசைநமஸ்காரம்புசிப்புமேதானுமில்லை
பார்த்துமெள்ளவீரனுமே பதறியேகோபங்கொண்டு
இப்படிக்குத்தானிருக்கால் ஏக்காதுகலியுகத்தில
என்றுநினைந்து எழுந்திருந்து அக்கோரம
மீனாட்சிசந்நதிபோய் விசையுடனேதெண்டனிட்டு
என்தாயேமீனாட்சியெனக்கு புத்திசொன்னபடி
பட்டணத்திலுள்ளோரும பராமரிப்பதில்லையென்று
அதுபார்த்துநீயிருந்தால் என்வயிறுபசியாதோ
ஆதலால்பட்டணத்தில் அமர்ந்தமனிதர்களை
கொள்ளைகொள்ளவெனக்குக் கூறவையேயானக்கால்
காவடியுந்தோளேந்திக்கம்பத்தடிவருவேனம்மா
என்றுதான்சொல்லஈஸ்வரியுந்தான்கேட்டு
கம்பத்தடிவீராக் காரியத்தைச்சொல்லுகிறேன்
அணிவுகூடும்வீராதுள்ள,தேயிக்கேரம

திருமலைநாய்க்கர் தம்செம்பொன்மணிமாளிகையில்
உள்ளே நுழைந்து உபாயமென்றுசொல்வாய்நீ
அவ்விடத்திலுள்ளவரை அதட்டிமிகவிழுந்து
பண்ணிவந்தபூசைபாங்குடனே வாங்குமென்றாள்
என்தாயேமீனாட்சியிதுபோதுமென்றுசொல்லி
திருமலைநாய்க்கன்செம்பொன்மணிமாளிகையில்
ஆக்கிரமித்துப்போய் அதட்டிதொடைதட்டி
நெஞ்சதின்றநெஞ்சறக்கும நடுச்சாமவேளையிலே
பட்டணத்திலுள்ள பாரமனிதரெல்லாம
வண்டத்துறைவீரன் வருகின்றவழிதனிலே
எதிரேவரப்பயந்து எல்லோருந்தாமொளிப்பார்
மன்னனரண்மனையில் மதிலேறிவீரனும்போய்
சப்பிரமஞ்சக்கூடத்தில் தனித்துச்சயனஞ்செய்யும்
திருமலைநாய்க்கர்தனைச் செவ்வையாய்த்தான்பார்த்து
தோட்டிபோலுங்காட்டி சொர்ப்பனஞ்சாதித்தான்
வேர்த்துவிரிவிரித்து விழித்துமெள்ளத்தான்பார்த்து
பதறியெழுந்திருந்து பைங்கிளியைதானெழுப்பி
காணாதசொர்ப்பனந்தான்கண்டுபயந்தேனடி
என்றுசொல்லக்கேட்டு இயற்கையுள்ளபெண்சாதி
ஏதுநடந்தாலும ஈஸ்வரியாள்மீனாட்சி
பொற்பாதந்தனையொழியப் புகலுவதற்கேதுமில்லை
மன்னவர்க்குதேவதலைமங்கையருந்தானுரைத்தாள்
சொல்லுகின்றவார்த்தையெல்லாந்துறைவீரன்கேட்டி
ருந்து-ஆகட்டுமென்று அரண்மனையைவிட்டுமெள்ள

கோட்டைத்தலைவாசல் குதிரைலாயம்புகுந்து
பஞ்சக்கலியாணி பட்டத்துக்குதிரையையும
அருத்தாரரைகொடியில் ஆங்காரங்கொண்டவன்காண்
மாட்டுமந்தையிர்புகுந்து மகாபூசைகொண்டான்காண்
உக்கிரமுள்ளசேவகர்கள் ஒருநூறுதலையாறி
படுத்திருக்குஞ்சாவடியில் பாங்குடனேபோய்புகுந்து
சுழற்றிஎறிந்தான்காண் சுற்றுமதிக்கப்பாலே
ஆனைகட்டும்லாயத்திலே அஞ்சாமல்வீரன்போய்
மண்டியிட்டுவீரன்மதையானையைப்பிடித்து
கன்னிகைபெண்கள் கண்ணுறங்கும்வேளையிலே
கன்னியர்களருகில்வந்து காளைமுத்தவீரனுந்தான்
செய்தகுலுக்குத்திடுக்கென்றுசத்தமிட
அபயமென்றசத்தம் அண்டமெல்லாந்தானதிர
காரணனுக்தென்மதுரைகம்பத்தடியில்வந்தான்
அன்றிரவுசென்று அலர்கதிரோன்வந்துதித்தான்
கச்சிதிருமலைநாயக்கன் காலையிலெழுந்திருந்து
கால்கைகள்சுத்திசெய்து கனத்தபணிபூண்டு
கட்டியங்கள்கூறக்கவரிப்பணிவீச
நாகசுரமேளநாட்டியங்களாடிவர
மந்திரிகள்சேனைமகிழ்மன்னர்கூட்டமுடன்
ஆசாரவாசல்விட்டு அரண்மனையுந்தான்கடந்து
சொக்கரதுசந்நிதிக்கு துருசாகவோடிவந்து
அங்கயர்கண்மீனாட்சியம்மனுடசந்நிதியில்
மீனாட்சிமுன்பாகவேந்தன்விரைவில்வந்து

முக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
எனதாயேமீனாட்சி யீஸ்வரியேயிப்போது
காணாதசொர்ப்பனங்கள் கண்டவிதங்களென்ன
அதிசயங்கள்வந்தவகை. அடியேனறிவதற்கு
வழியாயுரைக்கவேணும் வாய்மையுள்ளயீஸ்வரியே
பார்வேந்தனப்போது பாதத்தில்தான்விழுந்தான்
வாழ்மதுரைசொக்கரும் மதுரைமீனாட்சியரே
அப்பாமகனே அதிசயங்கள்வந்தவகை
காரணமாய்வந்தவகை கம்பத்தடிவீரன்
பட்டபாடெல்லாம் பாரோர்கிளைக்கவில்லை
பொந்திபசிமெத்த பொல்லாதவீரனுக்கு
உண்டானதினாலே ஓடிவந்தானன்மனைக்கு
வீரன்குறையொழிய வேறொன்றுந்தானுமில்லை
பட்டணமெங்கும்பலதெருவார்பூசைசெய்ய
கம்பத்தடியில்வந்து காணிக்கைதானும்வைத்து
சந்துக்குச்சந்து தனிப்பூசைதானுமிட்டு
இந்தப்படிக்கு இதமுடனே தொழுதான்
வீரனகுறைதீர்ந்து வெகுவாய்மனங்களிப்பான்
என்றுசொல்லிஈஸ்வரியும் இதமுடனேவாக்குரைக்க
திருமலைநாய்க்கர் சீக்கிரத்தில்தானெழுந்து
கம்பத்தடியில்வந்து காளைமுத்துவீரனுக்கு
ஐந்நூறுபொன்கொண்டு அபிஷேகம்பண்ணிவைத்து
மண்டபமும்கட்டிவைத்து மகாபூசையுங்கொடுத்து
தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து

இளநீருஞ்செங்கரும்பும் இதமானபால்பழமும்
விதிக்குவிதிவேணபடிபூசித்துவர
சந்துக்குசந்துதனிப்பூசைதானுமிட
எல்லோரறியஎங்குமபறையறைய
மதுரையிலுள்ளோர்கள் வகையுடனேதானுமப்போ
விதிக்குவிதிவேணபடிபூசையிட்டார்
வீரனிடத்திற்கு வேந்தனுமவந்தேதொழுது
முப்பழமுமிட்டுமுன்பூசைபோடுகிறேன்
வந்தவினைகளெல்லாம மாளவேசெய்யுமையா
என்றுசொல்லநாய்க்கருமே இதமாகக்கைதொழுதார்
இப்படியாகஇருக்குமந்தவேளையிலே
கோட்டைக்குரிக்காரன் குமாரமுத்துநாய்க்கன்மேல்
திருவாய்மலர்ந்துசெப்பலுற்றானேரம்
என்னைநினைக்காமலிதுவரையிலேயிருந்தீர்
பொங்கிபசியாறிப்பூரித்தேனிப்போது
என்பெயரைப்போலயிந்தவிபூதியினை
வந்தபிணிநோயும் மானிடர்க்குத்திருமப்பா
என்றுதெளிவா யிதமாகத்தான்சொல்லி
முன்னிருந்தசேனையெல்லாம் முழுதுமெழுந்திருக்கச்
செய்துமலையேறிச் சென்றுதேயாவேசம்
திருமலைநாய்க்கர் திருநீறுதானைகொண்டு
அரண்மனைக்குச்சென்று ஆரிழைக்குதான்கொடுத்து
ஆண்பிள்ளைபிறந்தால் ஆணிமுத்துவீரனென்று

இடவேணும்பேரென்று இயம்பினார்நாய்க்கருமே
கும்பிட்டுவாங்கி குயில்மொழியாள்தானறிந்தாள்
மூன்றுமாதஞ்சென்று முருக்கம்பூமேனியரும்
புத்திரனுமுண்டானால பொற்கொடியுமப்போது
பத்தாணமாதத்தில் பாலனையும்பெற்றெடுத்தாள்
பிள்ளைக்குவீரன் பேர்வைத்து அந்நேரம
ஐந்நூறுவண்டியில் ஆனதொருசக்கரையும்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம
ஒன்பதுகாதவழி யூர்தோருஞ்சக்கரைகள்
வீதிக்குவீதிவேணமட்டும் வழங்கிவர
வேதியர்க்கெல்லாம வெகுவாய்த்தானங்கொடுத்து
சொக்கருடன்மீனாட்சி தலங்கூடற்கோயில்சென்று
முக்கால்வலமவந்துமூவிருகால்தெண்டனிட்டு
ஆயபதுபொன்னெடுத்து அபிஷேகம்பண்ணிவைத்து
அரண்மனைக்குவந்து அரசன்திருமலைநாயக்கன்
வீரனுக்குபூசை விதமுடனேதான்செய்து
பூதலத்திலுள்ளவர்கள் பூசைகொடுப்பார்கள்
உன்காவலுன்னடிமை வன்மையுள்ளவீரையனே
தற்காத்துக்கொண்டு தயவாகக்காருமையா
ஐயாவேவீரனே அனைவரையுங்காத்திடவாய
அவரவர்கள்பங்கில் அனுதினமுமநீயிருந்து

என்னையுங்காத்து இரட்சிக்கவேணுமையா
என்று திருமலைநாய்க்கன் இன்பமுடனே தொழுது
வாழ்மதுரைசொக்கர் மதுரைமீனாட்சியம்மாள்
தங்கள்கிருபையினால் தாரணியோர்வாழ்ந்திருக்க
நாடுதழைக்க நல்மழைகள் தான்பெய்ய

வாழி.

தேவர்களேவாருந்தேசத்தோர்தான்வாழி
அங்கையர்க்கண்மீனாட்சி அம்மையுந்தான்வாழி
பாடினோர்வாழி படித்தோருந்தான்வாழி
கேட்டோர்கிளைதழைத்துக் கீர்த்தியுடனேவாழி
மாடுகன்றுமக்கள் மருமக்கள்தான்வாழி
வீரனைப்பூசிக்கும் வேல்வீரர்தானவாழி
அம்பாளச்சேத்திரமெனு ச்சக்கூடந்தான்வாழி
மன்னர்கிருஷ்ணசாமிமுதலியார்மகிழ்ச்சியுடனேவாழி
அவரச்சுக்கூடத்திலுள்ளோ ரனைவர்களுந்தான்வாழி
நாவலர்கள்தான்வாழி நல்லோர்மிகவாழி
பூதலத்திலுள்ள புண்ணியர்கள்தான்வாழி
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீச்சுரனார்

மதுரைவீரசுவாமிகதை.

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

மதுரைவீரசுவாமிகதை

சரித்திர அலங்காரம்.

இம்மதுரைவீரன் அம்மானையைப் படித்தவர்களுங் கேட்டவர்களும் சுக்கிரவாரந்தோறும் பூசைசெய்பவர்களுக்கு கல்யாணங்கூடிவரும் உத்தியோகம்வரும் வியாதியால் மெலிகின்றவர்களுக்கு வியாதி நீங்கிவிடும்மனோவலை நீங்கிவிடும்சகலபாக்கியமும் சந்தானசம்பத்தும் அஷ்டயிஸ்வரியமும் தனகனகவஸ்துவும் தீர்க்காயுசும், புத்திரசம்பத்தும், மாடுகள் கன்றுகள், தழைத்துப் பயிர்களெல்லாம், நீட்சியையோங்கி யெப்பொழுது மறுவில்லாப்பெருமை யுண்டாகும் இந்தப் படிக்கி காசிகாண்டத்தில் வியாசரால்சொல்லியகலிகளிலிருந்ததை இக்கதைக்காக மொழிபெயர்த்தருளிய அசு